# பள்ளிக்கல்வித்துறை

# முதன்மைக் கல்வி அலுவலர்

# சென்னை மாவட்டம்

# 12ஆம் வகுப்பு

# பொருளியல்

**கற்றல் பொருள் தொகுப்பு**

***2022-2023***

www.Padasalai.Net



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

## தொகுப்பாளர்கள்

Mrs. **V.S.P.Revathi**
M.A.,B.Ed.,M.Phil., Headmistress,
SMDPVC Hr.Sec.School,Ch-112.

Mrs.**Rajalakshmi**,M.A.,B.Ed.,M.Phil.,
P.G. Asst.,
SMDPVC HSS,Ch-112.

Mrs.**S.JasminePatience**,B.Sc.M.A.B.Ed.,
P.G.Asst.,
Bentinck Hr.Sec.School for Girls,Ch-07.

Mrs.**K.Kannammal** M.A.,B.Ed.,M.Phil.,
P.G. Asst.,
The Hindu Theological Hr.Sec.School.Ch-01.

Rev.**Sr.S. Paska.** M.A.,M.Ed.,M.Phil.,,
P.G.Asst.,
St. Joseph Girls Hss,Ch-112.


www.Padasalai.Net



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

## ஒப்புகை

பன்னிரண்டாம் மாணவர்களுக்கான குறைந்த பட்ச கற்றல் பொருளை தொகுக்க எங்களுக்கு வாய்ப்பு வழங்கிய மரியாதைக்குரிய முதன்மைக்கல்வி அலுவலர் அவர்களுக்கு மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.

## முன்னுரை

இத்தொகுப்பின் நோக்கம் மாணவர்களுக்கு ஒரு விரிவான மற்றும் எளிதில் புரிந்து கொள்ள கூடிய குறைந்தபட்ச கற்றல் பொருளை வழங்குவதாகும்.

பொருளியல் பாடப் புத்தகத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பாடங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட கற்றல் பொருள் தொகுப்பு. இதில் அனைத்து **12** பாடங்களும் ஒரு மதிப்பெண் மற்றும் இரண்டு மதிப்பெண் கேள்வி பதில்களும், **1 – 6** மற்றும் **10** பாடங்களுக்கு **3** மதிப்பெண் மற்றும் **5** மதிப்பெண் கேள்வி பதில்களும் அடங்கும்.

மாணவர்கள் எளிதாக கற்க கற்றல் பொருள் தொகுப்பை பயன்படுத்த ஊக்குவிக்கப் படுகிறார்கள் கற்றவர்கள் இலக்கை அடைவதற்கு இக்குறைந்த பட்ச கற்றல் தொகுப்பு கவனம் செலுத்துகிறது.

வாழ்த்துக்கள் !!!



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

# பொருளடக்கம்


| வ. எண் | பாடங்கள் | விவரம் | பக்க எண் |
|---|---|---|---|
| 1 | 1 to 12 | ஒரு மதிப்பெண் | 4 to 13 |
| 2 | 1 to 12 | இரு மதிப்பெண் | 14 to 22 |
| 3 | 1 to 6 & 10 | மூன்று மதிப்பெண் | 23 to 33 |
| 4 | 1 to 6 & 10 | ஐந்து மதிப்பெண் | 34 to 46 |


www.Padasalai.Net



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

# ஒரு மதிப்பெண் வினாக்கள்

1. பொருளியல் பாடத்தின் கிளைகள் என்பவை **நுண்ணியல் மற்றும் பேரியல்.**
2. " (Macro)" என்ற வார்த்தையை அறிமுகப்படுத்தியவர் யார் ? **ராக்னர் பிரிக்ஸ்.**
3. " நவீன பேரியல் பொருளியலின் தந்தை " என அழைக்கப்படுபவர் யார் ? **ஜே.எம்.கீன்ஸ்.**
4. பேரியல் பொருளாதாரத்தின் வேறு பெயர் யாது ? **வருவாய் கோட்பாடு.**
5. பேரியல் பொருளாதாரம் எனபது எதைப் பற்றிய படிப்பு **மொத்தங்கள்.**
6. ஜே.எம்.கீன்சின் பங்களிப்பை குறிப்பிடுக. **பொது கோட்பாடு**
7. பொதுவான விலையின் தொடர் உயர்வை குறிப்பிடும் கருத்து **பணவீக்கம்** ஆகும்.
8. பொருளாதாரக் கொள்கையின் அவசியத்தைக் குறிப்பிடுக. **மேலே கூறப்பட்ட அனைத்தும்.**
9. ஒரு பொருளாதார அமைப்பின் அடிப்படை பொருளாதார நடவடிக்கைகளை குறிப்பிடுக. **உற்பத்தி மற்றும் நுகர்வு.**
10. ஒரு பொருளாதார அமைப்பில் காணப்படுவது. **மேலே கூறப்பட்ட அனைத்தும்.**
11. எந்த பொருளாதார அமைப்பில், உற்பத்தி உரிமை தனியாருக்கு மட்டுமே உள்ளது ? **முதலாளித்துவ அமைப்பு.**
12. பகிர்வில் சமத்துவத்தை கடைப்பிடிக்கிற பொருளாதார அமைப்பு **சமத்துவ பொருளாதார அமைப்பு .**
13. முதலாளித்துவத்தின் தந்தை என அழைக்கப்படுபவர் யார் ? **ஆடம்ஸ்மித்**
14. முதலாளித்துவத்தை பின்பற்றும் நாடு **அமெரிக்கா** ஆகும்.
15. தனியார் மற்றும் அரசு சேர்ந்து பொருளாதார நடவடிக்கையில் ஈடுபடும் பொருளாதார அமைப்பை குறிப்பிடும் பதம் **கலப்புப் பொருளாதாரம்.**
16. சமத்துவத்தின் தந்தையை கண்டுபிடி **காரல் மார்க்ஸ்.**
17. ஒரு குறிப்பிட்ட காலத்தில் (Point of time) குவிந்த சரக்குகளின் அளவை குறிப்பிடும் பதம் **இருப்பு** ஆகும்.
18. கீழ்வருவனவ்றுள் ஓட்ட மாறிலியை கண்டுபிடி. **வருவாய்.**
19. இரு துறை மாதிரியில் உள்ள இரு துறைகளை குறிப்பிடுக. **குடும்பங்களும் நிறுவனங்களும்.**
20. திறந்துவிடப்பட்ட பொருளாதாரத்தின் வட்ட ஓட்ட மாதிரி என்பது **நான்கு துறை மாதிரி** ஆகும்.
21. உற்பத்திக் காரணியின் செலவின் அடிப்படையிலான NNP **தேசிய வருவாய்**
22. முதன்மை துறை என்பது **விவசாயம்.**
23. எத்தனை முறைகளால் தேசிய வருவாய் கணக்கிடப்படுகிறது.**மூன்று.**
24. எவற்றைக் கூட்டி வருமான முறையில் தேசிய வருவாய் கணக்கிடப்படுகிறது ? **வருமானம்.**
25. கீழே கொடுக்கப்பட்டுள்ளவ்றில் எது மிகப் பெரிய எண்ணாக இருக்கும் ? GNP
26. **கட்டடத்துறை** துறையில் செலவு முறையில் தேசிய வருவாய் மதிப்பிடப்படுகிறது.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

27. மூன்றாம் துறை **பணிகள்** எனவும் அழைக்கப்படுபவர்.
28. ஒரு நாட்டின் **பொருளாதாரம்** செயலை தேசிய வருவாய் குறிப்பிடுகிறது.
29. **நாட்டின் மக்கள் தொகை** ஆள் தேசிய வருவாயை வகுத்தால் தலைவீத வருமானம் கண்டறியலாம்.
30. GNP = **GDP** + வெளிநாட்டிலிருந்து வரும் நிகர காரணி வருமானம்.
31. NNP என்பது **Net National Product**.
32. மொத்த மதிப்பிலிருந்து **தேய்மானத்தை** கழித்தால் நிகர மதிப்பு கிடைக்கும் ?
33. இந்தியாவில் நிதி ஆண்டு என்பது **ஏப்ரல் 1 முதல் மார்ச் 31.**
34. NNP யிலிருந்து வெளிநாட்டு காரணிகளின் நிகர வருமானம் கழிக்கப்பட்டால் கிடைக்கும் நிகர மதிப்பு **நிகர தேசிய உற்பத்தி.**
35. உற்பத்திப் புள்ளியில் NNP யின் மதிப்பு **காரணி செலவில் NNP.**
36. ஒரு நாட்டின் சராசரி வருமானம் என்பது **தலைவீத வருமானம்** .
37. பணவீக்கத்திற்கு சரிபடுத்தப்பட்ட தேசிய வருவாயின் மதிப்பு **உண்மைத் தேசிய வருவாய்** என அழைக்கப்படுகிறது.
38. கீழ்வருவனவற்றுள் எது ஓட்ட (Flow) கருத்துரு ? **மாத வருமானம்.**
39. PQLI என்பது **பொருளாதார நலனின்** குறியீடு ஆகும்.
40. மிக அதிக அளவிலான தேசிய வருவாய் **தனியார் துறையிலிருந்து** வருகிறது.
41. நடப்புக் கூலி விகித்தில் வேலை செய்யா விரும்புகிற ஒவ்வொருவரும் பணியில் இருந்தால் அது **முழுவேலவாய்ப்பு** எனப்படும்.
42. அமைப்புசார் வேலையின்மையின் இயல்பு **இயங்கும் சமுதாயம்.**
43. மறைமுக வேலையின்மையில், உழைப்பாளியின் இறுதிநிலை உற்பத்தி **பூஜ்யம்.**
44. தொன்மைப் பொருளியல் கோட்பாட்டின் பிரதான இயல்பு **பொருளாதாரம் எப்போதும் சமநிலையில் இருக்கும்.**
45. J.B.சே ஒரு **தொன்மை பொருளியலாளர்**
46. கீன்ஸின் கருத்துப்படி, முதலாளித்துவ பொருளாதார அமைப்பில் எப்படிப்பட்ட வேலையின்மை காணப்படுகிறது? **குறைவு வேலைவாய்ப்பு.**
47. வேலைவாய்ப்பு பற்றி தொன்மை கோட்பாட்டின் மையக் கருத்து என்பது **அங்காடி விதி.**
48. கீன்ஸின் கூற்றுப்படி வேலையின்மை என்பது **விளைவு தேவை பற்றாக்குறை.**
49. சேமிப்புக்கும் முதலீட்டுக்கும் இடையே சமநிலையை கொண்டு வருவது **வட்டியின்** நெகிழ்வு ஆகும்.
50. நவீன பொருளாதார கோட்பாட்டின் வளர்ச்சியில் ***கீன்ஸ்*** கோட்பாடு ஒரு திருப்பு முனையாக அமைந்தது.
51. வேலைவாய்ப்பு மற்றும் வருவாய் பற்றிய கீன்ஸின் கோட்பாட்டின் அடிப்படைக் கருத்துரு **விளைவுத் தேவை.**
52. தொகுத் தேவையின் கூறு **அரசுச் செலவு** ஆகும்.
53. மொத்த அழிப்பு சமம் C + S + T + Rf.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

54. தலையிடாக் கொள்கைக்குப் பதிலாக கீன்ஸின் கோட்பாடு சில சூழல்களில் **அரசின் தலையீட்டை** எடுத்துரைக்கிறது.
55. கீன்ஸின் வேலைவாய்ப்பு மற்றும் வருவாய் கோட்பாட்டில், **உற்பத்தித்திறன் ஒப்பிடும்போது மிகக் குறைந்தளவு மொத்தத் தேவை .**
56. தொன்மைக் கோட்பாடு **சமநிலை வரவு செலவு** ஐ ஆதரிக்கிறது.
57. **குறுகிய காலம்** சமநிலையை கீன்ஸினுடைய கோட்பாடு வலியுறுத்தியது.
58. தொன்மைக் கோட்பாட்டின்படி, வட்டி வீதம் **சேமிப்பு**க்கான வெகுமதி.
59. கீன்ஸின் கோட்பாட்டில் , பணத்திற்கான தேவையையும் பணத்தின் அளிப்பையும் நிர்ணயிப்பது **வட்டி வீதம்** ஆகும்.
60. ஒரு பொருளாதரத்தில் **தானியங்கும் விலைக்கருவி** இயக்கத்தை சே (say) யின் விதி வலியுறுத்தியது.
61. சராசரி நுகர்வு நாட்டம் கணக்கிடப்படுவது **C/Y.**
62. இறுதி நிலைநுகர்வு நாட்டம் கூடினால் **நுகர்வுச் சார்புக்கோடு செங்குத்தை நோக்கிச் செல்லும்**
63. கீன்ஸின் நுகர்வுச் சார்பு C = 10 + 0.8 ஆக இருந்து, செலவிடக் கூடிய வருவாய் ரூ.1000 ஆக இருந்தால், நுகர்வு எவ்வளவு ? **ரூ.810**
64. கீன்ஸின் நுகர்வுச்சார்பு C = 10 + 0.8Y ஆக இருந்து,செலவிடக்கூடிய வருவாய் ரூ.100 ஆக இருந்தால், சராசரி இறுதிநிலை நுகர்வு நாட்டம் எவ்வளவு ? **ரூ.0.8**
65. கீன்ஸின் நுகர்வுச்சார்பு C = 10 + 0.8Y ஆக இருந்து,செலவிடக்கூடிய வருவாய் ரூ.100 ஆக இருந்தால், சராசரி இறுதிநிலை நுகர்வு நாட்டம் எவ்வளவு ? **ரூ.0.9**
66. தேசிய வருவாய் உயரும் போது **APC யின் மதிப்பு குறைந்து சென்று MPC யின் மதிப்பை நெருங்கிவிடும்.**
67. ஒரு குறிப்பிட்ட வருவாய் அளவில், நுகர்வு அதிகரித்தால் **மொத்த தேவை உயரும்.**
68. குறைவான வட்டி வீதம் **கடனையும் செலவையும் அதிகரிக்கும்.**
69. இறுதி நிலை நுகர்வு விருப்பு = **நுகர்வு மாற்றம் / வருவாய் மாற்றம்.**
70. வருவாய்க்கும் மொத்த நுகர்வுச் செலவுக்கும் உள்ள தொடர்பு **நுகர்வுச் சார்பு .**
71. MPC ஐயும் MPS ஐயும் கூட்டினால் கிடைப்பது **1.**
72. வருவாய் உயர்ந்தால், நுகர்வு **உயரும்.**
73. முதலீடு தன்னிச்சையானது என அனுமானிக்கப்பட்டால், AD யின் சாய்வை நிர்ணயிப்பது **இறுதி நிலைநுகர்வு நாட்டம்.**
74. **மொத்த தேவை, வெளியீடு** இடம்பெயர்ந்த பின்னர் மொத்த தேவை, வெளியீடு எவ்வளவு மாறுகிறது என்பதை பெருக்கி கூறுகிறது.
75. பெருக்கியின் மதிப்பு = **அ மற்றும் ஆ**



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

76. MPC = O.D எனில், பெருக்கியின் மதிப்பு **2**

77. ஒரு திறந்துவிடப்பட்ட பொருளாதாரத்தில் (Open Economy) இறக்குமதி, பெருக்கியின் மதிப்பை **குறைக்கிறது.**

78. கீன்சின் கருத்துப்படி, முதலீடு MEC யும் **வட்டி வீதத்தையும்** சார்ந்தது.

79. மிகைப் பெருக்கி (Super Multiplier) என்ற கருத்தை முதன் முதலில் பயன்படுத்தியவர். **J.R.ஹிக்ஸ்**

80. MEC என்ற கருத்துருவை அறிமுகப்படுத்தியவர் யார் ? **J.M.கீன்ஸ்**

81. RBI – யின் தலைமையகம் அமைந்துள்ள இடம் **மும்பை**

82. பணம் என்பது **உள்ளவற்றில் அதாக நீர்மைத் தன்மை கொண்ட சொத்து ஆகும்.**

83. காகிதப் பண முறையை மேலாண்மை செய்வது **மைய பணவியல் அமைப்பு .**

84. M1 மற்றும் M2 ஆகிய இரண்டிற்கும் உள்ள வித்தியாசம் **வங்கியின் கால வைப்புகள்.**

85. இரவின்ஃபிஷரின் பண அளவுக் கோட்பாடு பிரபலமான ஆண்டு **1911.**

86. MV என்பது **சட்டபூர்வ** பண அளிப்பு.

87. பணவீக்கம் என்பது **விலைகள் அதிகரிப்பு.**

88. **உயர் பணவீக்கம்** பணமதிப்பில் தீவிர மதிப்பு குறைவினை ஏற்படுத்துகிறது.

89. கூலி மற்றும் மூலப்பொருட்கள் செலவு கூடுவதால் பொருட்களின் பொது விளைமட்டம் அதிகரிப்பது **செலவு உந்து** பணவீக்கம் ஆகும்.

90. பணவீக்கத்தின்பொழுது பயனடைபவர்கள் யார் ? **கடன் பெற்றோர்கள்.**

91. **எதிர்பணவீக்கம்** என்பது பணவீக்க விகிதம் குறைந்து செல்வது ஆகும்.

92. தேக்க வீக்கத்தில் பணவீக்க விகிதத்துடன் இணைந்திருப்பது **தேக்கம்.**

93. பொருளாதார நடவடிக்கைகளில் ஏற்படும் ஏற்றத்தாழ்வுகளை **வணிகச் சுழற்சி** என அழைக்கின்றோம்.

94. மந்த காலத்தில் பொருளியல் நடவடிக்கைகள் இவ்வாறு இருக்கும் **மிக குறைந்தபட்சமாக.**

95. "பரிவர்த்தனைகளில் போதுவாகா ஏற்றுக்கொள்ளப்படும் ஒரு இடையீட்டுக் கருவியாகவும், அளவீடு மற்றும் மதிப்பினை இருப்பு வைத்தல் ஆகியவற்றினை செய்யும் ஒரு பொருள் பணம் " என்ற இலக்கணத்தை வழங்கியவர். **கிரௌதர்.**

96. பற்று அட்டை என்பது **நெகழி பண** உதாரணம் ஆகும்.

97. ஃபிஷரின் பான் அளவுக் கோட்பாடு பணத்தின் இந்த பனியின் அடிப்படையில் அமைக்கப்பட்டது.**பரிவர்த்தனை கருவி.**

98. MV = PT என்ற சமன்பாட்டில, V என்பது **பணத்தின் சுழற்சி வேகம் .**

99. விலைவாசி மெதுவாக உயரும் பொழுது அது அழைக்கபடுவது **மிதமான பணவீக்கம்.**

100. **தவழும்** பணவீக்கம் பொருளாதாரத்தினை எந்தவகையிலும் பாதிக்காது.

101. ஒரு வங்கி என்பது **நிதி நிறுவனம்.**



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

102. ஒரு வணிக வங்கி செய்யும் சேவை **அ மற்றும் ஆ.**

103. வணிக வங்கிகளின் பணிகளின் இருபெரும் பிரிவு **மேற்சொன்ன அனைத்தும்.**

104. வங்கிக்கடன் என்பது எதைக் குறிக்கிறது? **கடன் பணம் மற்றும் முன்பணம்.**

105. கடன் உருவாக்கம் என்பதன் பொருள் **கடன் மற்றும் முன்பண பெருக்கம்.**

106. வங்கியல்லா நிதி நிறுவனங்கள் **வங்கி உரிமம்** வைத்திருப்பதில்லை.

107. மைய வங்கி நாட்டின் **பணவியல்** அதிகார அமைப்பு.

108. வங்கிகளின் வங்கி என அழைக்கப்படுவது. **இந்திய ரிசர்வ் வங்கி .**

109. கடைசி நேரத்தில் உதவும் உற நண்பன் என்ற பணியினைச் செய்வது. **மைய வங்கி .**

110. வங்கி விகிதம் என்பது **முதல் நிலை பத்திரங்களை மறு தள்ளுபடி செய்வது.**

111. ரெப்போவிகிதம் என்பதன் பொருள் **ரிசர்வ் வங்கி வணிக வங்கிகளுக்கு அளிக்கும் கடனுக்கான வட்டி விகிதம்.**

112. நெறிமுறை தூண்டல் எனபது **தூண்டுதல் நடவடிக்கை.**

113. விவசாய மறுநிதி மேம்பாட்டுக் கழகம் துவங்கப்பட்டது **ஜூலை 1, 1963.**

114. நபார்டு வங்கி எப்பொழுது ஆரம்பிக்கப்பட்டது ? **ஜூலை 1982.**

115. ஏற்றுமதி – இறக்குமதி வங்கி துவங்கப்பட்டது ? **மார்ச் 1982.**

116. மாநில நிதிக்கழகம் எந்த சட்டத்தின் கீழ் துவங்கப்பட்டது? **இந்திய அரசு.**

117. பணவியல் கொள்கையை வடிவமைப்பது **மைய வங்கி.**

118. நிகழ்நிலை வங்கியகம் என்பது எவ்வாறு அழைக்கப்படுகிறது.**இணைய வங்கி .**

119. ஏ.டி.எம்.(ATM) என்பதன் விரிவாக்கம் என்ன ? **தானியங்கி பணம் வழங்கும் இயந்திரம்.**

120. 2016 – ல் பணமதிப்பு நீக்கம் எந்தெந்த மதிப்பு பணங்களுக்கு ஏற்படுத்தப்பட்டது? **500 மற்றும் 1000**

121. இரண்டு நாடுகளுக்கிடையிலான வாணிகம் எனபது **வெளி வாணிகம் .**

122. கீழ்கண்டவற்றுள் வாணிகத்தை தீர்மானிக்கும் காரணி எது ? **மேற்கண்ட அனைத்தும்.**

123. பன்னாட்டு வாணிகம் உள்நாட்டு வாணிகத்திலிருந்து வேறுபடக் காரணம். **மேற்சொன்ன அனைத்தும்.**

124. நாடுகள் பன்னாட்டு வாணிகத்தில் ஈடுபட அடிப்படைக் காரணம் **உற்பத்தி வளங்கள் நாடுகளுக்கிடையே ஏற்றத் தாழ்வுடன் பகிரப்பட்டுள்ளது.**

125. கீழ்கண்டவைகளில் பன்னாட்டு வாணிகத்தின் நன்மை ஏது ? **மக்கள் வெளிநாடுகளுக்கு செல்லவேண்டிய அவசியம் ஏற்படாது.**

126. பணமாற்று வீதம் நிர்ணயமாகும் சந்தை **அந்நிய செலாவணி**

127. கீழ்கண்ட எந்த பணமாற்று நிர்ணய முறையில் சந்தை விசைகளான தேவையும் அளிப்பும் பணமாற்று வீதத்தை நிர்ணயிக்கிறது. **மாறுகின்ற பணமாற்று வீதம்.**

128. ஏற்றுமதி நிகரம் என்பது **ஏற்றுமதி - இறக்குமதி .**



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

129. கீழ்கண்டவர்களில் யார் ஒற்றைக் காரணி வாணிப வீதத்தை வடிவமைத்தவர் **ஜேக்கப் வைனர்.**

130. வாணிப வீதம் **ஏற்றுமதி விலை இறக்குமதி விலை விகிதம்** பற்றி குறிப்பிடுகின்றது.

131. சாதகமான வாணிக சூழலில் ஏற்றுமதி இறக்குமதியை விட **அதிகமாக** ஆகா இருக்கும்.

132. இறக்குமதி ஏற்றுமதியை விட அதிகமாக இருத்தலை கீழ்கண்டவழிகளில் எது சரி செய்யும். **ஏற்றுமதி வரியை அதிகரித்தல்.**

133. அயல்நாட்டுச் செளுத்துநிலை உள்ளடக்கிய இனங்கள் **அ மற்றும் ஆ**

134. அயல்நாட்டுச் செளுத்துநிலை கூறுகள் கீழ்கண்டவைகளில் எவை ? **அ,ஆ,இ மூன்றும்.**

135. வாணிபக் கொடுப்பல் நிலை அறிக்கையில் **பொருள் பரிவர்த்தனை மட்டும் பதிவாகிறது.**

136. சுற்றுலா மற்றும் வெளிநாட்டுப் பயணம் தொடர்புடைய பரிவர்த்தனைகள் அயல்நாட்டு செலுத்துநிலையின் எந்தக் கணக்கின் கீழ் பதிவாகிறது. **பணிகள் வாணிக கணக்கு.**

137. சுழற்சி அயல்நாட்டுச் செளுத்துநிலை சமமற்ற நிலைக்கான காரணம் **அ மற்றும் ஆ.**

138. கீழ்கண்டவைகளில் எவை வெளிநாட்டு நேரடி மூலதனத்திற்கான உதாரணமாக கூறமுடியாது? **வெளிநாட்டு துணி நிறுவனம் வெளியிட்ட பங்கு அல்லது கடன் பத்திரத்தை வாங்குவது.**

139. இந்தியாவில் வெளிநாட்டு நேரடி மூலதனம் அனுமதிக்கப்படாத துறை ? **அணு ஆற்றல்.**

140. கோட்பாட்டு அடிப்படையில் வெளிநாட்டு நேரடி மூலதனத்தின் நன்மைகளாவன. **மேற்கண்ட அனைத்தும்.**

141. பன்னாட்டு பண நிதியம் கீழ்க்கண்ட இந்த மாநாட்டில் உருவாக்கப்பட்டது **பிரிட்டன் வூட்ஸ் மாநாடு.**

142. பன்னாட்டு பண நிதியத்தின் தலைமை அலுவலகம் அமைந்துள்ள இடம் **வாஷிங்டன் டி.சி.**

143. ஐ.பி.ஆர் டி. இவ்வாறாகவும் அழைக்கப்படுகிறது. **உலக வங்கி**

144. சிறப்பு எடுப்பு உரிமையின் மற்றொரு பெயர் **தாள் தங்கம்.**

145. நீண்டகாலக் கடன்வழங்கும் நிதி நிறுவனம் **உலக வங்கி.**

146. கீழ்கண்ட நாடுகள் எது சார்க் அமைப்பின் உறுப்பினர் இல்லை ? **ஜப்பான் .**

147. பன்னாட்டு மேம்பாட்டு அமைப்பு கீழ்க்கண்ட இதன் துணை அமைப்பாகும். **உலக வங்கி.**

148. காப்புரிமை, பதிப்புரிமை,வாணிக ரகசியம் போன்றவை **வணிகம் சார் சொத்துரிமை** உடன் தொடர்புடையவை.

149. உலக வர்த்தக அமைப்பின் முதலாவது அமைச்சர்கள் அளவிலான மாநாடு நடைபெற்ற இடம் **சிங்கப்பூர்.**

150. ஆசியான் கூட்டங்கள் 3 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும்.

151. கீழ்கண்டவைகளில் எது SAARC உறுப்பினர் நாடு அல்ல? ***சீனா***

152. சார்க் உச்சி மாநாடு 2 ஆண்டுகளுக்கொருமுறை நடைபெறுகிறது.

153. ஆசியான் அமைப்பின் தலைமை அலுவலகம் அமைந்துள்ள இடம். **ஜகார்த்தா.**

154. பிரிக் (BRIC) என்ற சுருக்கச் சொல் கோர்க்கப்பட்ட ஆண்டு 2001.

155. ஆசியான் அமைப்பு நிறுவப்பட்ட ஆண்டு 1967.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

156. பத்தாவது பிரிக்ஸ் அமைப்பின் உச்சி மாநாடு ஜூலை 2018 ல் நடைபெற இடம் **ஜோகனஸ் பர்க்.**

157. புதிய மேம்பாட்டு வங்கி இந்த அமைப்புடன் தொடர்புடையது **பிரிக்ஸ்.**

158. ஆசியான் விவாதத்தில் பங்கெடுக்கும் ஆறு நாடுகளில் சேராத நாடு **வட கொரியா.**

159. சார்க் வேளாண் தகவல் மையம் துவங்கிய ஆண்டு **1988.**

160. பெனிலக்ஸ் (BENELUX) என்பது இதன் வடிவமாகும். **சுங்கவரி ஒன்றியம்.**

161. நவீன அரசு எனப்படுவது? **நலம் பேணும் அரசு.**

162. கீழ்வருவனவற்றுள் தனியார் நிதியின் பண்புகளில் இல்லாதது **விளம்பரப்படுத்துதல்.**

163. வரி கீழ்காணும் குணங்களைக் கொண்டது **மேல்கூறப்பட்ட அனைத்தும்.**

164. ஆடம் ஸ்மித்தால் கூறப்படாத புனித வரிவிதிப்பு விதி எது? **எளிமை விதி.**

165. கீழே உள்ள வாக்கியங்களிக் கருத்தில் கொண்டு, சரியான ஒன்றை அடையாளம் காண்க.**ii மட்டும்.**

166. GST இதற்கு சமம் ? **விற்பனை வரி.**

167. இந்த நன்மையை நேர்முக வரி கொண்டிருக்கவில்லை **வசதி**

168. கீழ்வருவனவற்றுள் எது நேர்முக வரி ? **வருமான வரி**

169. கீழே உள்ளவற்றில் எந்த வரி மைய அரசின் பட்டியலில் இல்லை ? **விவசாய வருமான வரி.**

170. அரசின் வருவாய் வரவு ( Revenue Receipts) கணக்கில் சேராதது. **சொத்திலிருந்து கிடைக்கிற வாரம்.**

171. வருவாய் செலவு ( Revenue Expenditure ) வருவாய் வருவாயைவிட (Revenue receipts) அதிகமாக இருந்தால், அது **வருவாய் பற்றாக்குறை.**

172. மொத்தச் செலவு கடன் அல்லாத மொத்த வருவையைவிட அதிகமாக இருந்தால்,அது **நிதிப் பற்றாக்குறை.**

173. பற்றாக்குறை நிதியாக்கத்தின் அடிப்படை நோக்கமாவது **பொருளாதார முன்னேற்றம் .**

174. பற்றாக்குறை வரவு செலவுத் திட்டம் என்பதன் பொருளாவது **அரசின் மொத்தச்செலவு மொத்த வருவாயைவிட அதிகம்.**

175. பொதுக்கடனைத் திரும்பிச் செலுத்தும் முறை **இவை அனைத்தும்.**

176. பொதுக்கடனை மாற்றுதல் என்பது **அதிக வட்டி வீதம் கொண்ட கடன் பத்திரங்களுக்குப் பதலாக குறைவான வட்டி வீதம் கொண்ட கடன் பத்திரங்களைக் கொடுத்தல்.**

177. பட்ஜெட் என்ற பதம் ஃப்ரென்ஞ்ச் வார்த்தையாகிய (Bougette) விலிருந்து பெறப்பட்டது. அதன் பொருள் **சிறிய பை.**

178. கீழே கொடுக்கப்பட்டுள்ளவற்றில் எது இந்தியாவில் பெரிய பற்றாக்குறையாக இருக்கும் ? **நிதிப் பற்றாக்குறை.**

179. நிதிக்குழு நிர்ணயம் செய்வது எது? **நிதி வளங்களை மாநில அரசுக்கு மாற்றுதல்.**

180. கீழே கொடுக்கப்பட்டுள்ளவற்றுள் எது சரியான சொற்றொடர் எனக் கண்டுபிடி **இரண்டும்.**

181. " என்வைரான்மென்ட்" (Environment) என்ற வார்த்தை **என்வைரோனியா** என்ற பொருள் கொள்ளும் எந்த பிரஞ்ச் வார்த்தையிலிருந்து தோன்றியது ?



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

182. " உயிர்சார்" (biotic) என்ற வார்த்தையின் பொருள் என்ன ? **உயிர் வாழ்வன.**

183. சூழலியல் என்பது எந்த ஒன்றின் சிறிய பகுதி? **பையோஸ்பியர்.**

184. " பொருள்சார் சமநிலை அணுகுமுறையை" நிறுவியவர் யார்? **ஜோசப் ஸ்டிக்லிஸ் மற்றும் எட்வர்ட் சேம்பர்லின்.**

185. சுற்றுச்சூழல் பொருட்கள் என்பவை **சந்தையிடா பொருட்கள்.**

186. தூய பொதுப் பொருட்களில், நுகர்ச்சி என்பது **போட்டி உடையது .**

187. சுற்றுச்சூழல் பொருலியலின் அடிப்படை கருத்துக்களில் ஒன்றும், சந்தை தோல்விக்கு காரணமானதும் **எதிர்மறை புற விளைவுகள்.**

188. வெளிக்காற்று மாசுவுக்கு **மோட்டார் வாகனங்கள்** காரணமாகும்.

189. கார்பன் மோனாக்சைட் அதிகமாவதில் பங்களிப்பைச் செய்வது **மோட்டார் வாகனங்கள்**

190. பின்வரும் எது உலக வெப்பமயமாதலுக்கு காரணம்? **வெப்பநிலை அதிகமாதல்.**

191. பின்வரும் எந்த ஒன்று புற ஊதாக் கதிர்களிலிருந்து மனிதர்களை பாதுகாக்கிறது? **ஓசோன் படலம்.**

192. உலக வெப்பமயமாதல் **பருவநிலை மாறுபாடு** என்றும் குறிப்பிடப்படுகிறது.

193. பின்வரும் எந்த ஒன்று உலக வெப்பமயமாதலின் எதிர்பார்க்கப்படும் விளைவு? **கடல் மட்டம் உயர்தல்**

194. சத்துக்களை அதிகப்படுத்தும் செயல் எப்படி அழைக்கப்படுகிறது? **யூட்ரோபிகேசன்.**

195. மண் மாசுவிர்க் முதல்நிலை காரணம் **இரசாயன உரங்கள்.**

196. வன அழிவிற்கான முதன்மை காரணம் யாது? **மரம் வெட்டும் தொழில்.**

197. மின்னணு கழிவுகள் **இ-கழிவுகள்** என்று பொதுவாக குறிப்பிடப்படுகின்றன.

198. அமில மழை **காற்று மாசு** விளைவுகளில் ஒன்று.

199. நீடித்த வளர்ச்சி (அல்லது) வளங்குன்றா வளர்ச்சிக் குறிக்கோள்களை அடைய விதிக்கப்பட்டிருக்கும் காலம் **2030.**

200. கார நிலம் அதிகமாக காணப்படும் சமவெளி எது? **மேற்கூறிய அனைத்தும்.**

201. " வளர்ச்சியுடன் கூடிய மகிர்வு" கீழ்கண்ட எந்த அணுகுமுறையின் புகழ்பெற்ற முழக்கம் இது. **புதிய பொது நல அணுகுமுறை**

202. பின்வருவனவற்றுள் பொருளாதார வளர்ச்சியின் தன்மை இல்லாதவை எது? **விரிவான கருத்து.**

203. கீழ்கண்டவற்றுள் எவை பின்தங்கிய நாடுகளின் பண்புகளில் ஒன்றாகும். **வறுமையின் நச்சு சுழற்சி.**

204. கீழ்கண்டவற்றுள் எந்த பொருளாதாரம் சாராத காரணி, பொருளாதார முன்னேற்றத்தை நிர்ணயிக்கிறது. **மனிதவளங்கள்.**

205. பொருளாதார வளர்ச்சி உற்பத்தி **அதிகரிப்பை** அளவிடுகிறது.

206. அளிப்பு பக்கத்திலிருந்து இயங்கும் வறுமையின் நச்சு சுழற்சியின்படி ஏழைநாடுகள் ஏழையாகவே இருக்கின்றன ஏனென்றால் **அ மற்றும் ஆ.**

207. கீழ்கண்ட எந்த திட்டத்தில், வேளாண்மை மற்றும் கிராமப் பொருளாதாரத்தை மையமாகக் கொண்டது? **காந்தியத் திட்டம்.**



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

208. கீழ்கண்ட திட்டங்களை அவை முன்மொழியப்பட்ட ஆண்டின் அடிப்படையில் காலகிரம் வரிசைப்படி தொகுத்து விடையைத் தேர்ந்தெடுக்கவும். iv) iii) ii) i).

209. எம் என் ராய் வழங்கியத் திட்டம் கீழ்கண்டவைகளில் எது? **மக்கள் திட்டம்.**

210. சுட்டிக்காட்டும் திட்டமிடலை செயல்படுத்திய நாடு **ஜெர்மனி .**

211. குறுகிய காலத் திட்டத்தின் இன்னொரு பெயர் **கட்டுப்படுத்தும் திட்டம்.**

212. நீண்டகாலத் திட்டத்தின் மற்றொரு பெயர் **முன்னோக்குத் திட்டம்.**

213. நீண்டகாலத் திட்டமிடலின் அடிப்படைக் கருத்து நாட்டின் **தொழில்** மாற்றமாகும்.

214. சர்வோதயாத் திட்டத்தை முன்மொழிந்தவர் யார் ? **ஜெயப்பிரகாஷ் நாராயணன்.**

215. இந்தியாவில் திட்டக்குழு அமைக்கப்பட்ட ஆண்டு 1950.

216. " அடிமைத்தனத்திற்கான பாதை " என்ற புத்தகத்தை எழுதியவர் யார் ? **பிரடெரிக் ஹேயக்.**

217. முன்னோக்குத் திட்டத்தின் மற்றொரு பெயர் **நீண்டகாலத் திட்டமிடல்.**

218. நிதி ஆயோக் கீழ்கண்ட எதன் மூலமாக அமைக்கப்பட்டது? **அமைச்சரவைத் தீர்மானம்.**

219. நிதி ஆயோக்கின் (NITI Aayog) சரியான ஆங்கில விரிவாக்கம். National Institution of Transforming India.

220. சட்டப்பூர்வமாக நிதி ஆயோக்கின் தலைவராக கீழ்க்கண்ட எந்தப் பதவியில் உள்ள ஒருவர் செயல்படுவார்? **பிரதமர்.**

221. ' ஸ்டாட்டிஸ்டிக்ஸ்' (Statistics) என்ற வார்த்தை **ஒருமை மற்றும் பன்மை** ஆகும்.

222. புள்ளியியல் எண் விவரங்களை பற்றி படிக்கும் பயன்பாட்டுக் கணிதத்தின் ஒரு சிறப்புப் பகுதி என்று கூறியவர் யார் ? **போடிங்டன்.**

223. இரண்டாம் நிலை விவரங்களுக்கான ஆதாரம் **அ மற்றும் ஆ**

224. கேள்வித்தாள் மூலம் புள்ளிவிவரம் திரட்டப்பட்டால் அது **முதல் நிலைவிவரம்.**

225. நேர்கூட்டு உறவினை கொண்டிருக்கும் இரு மாறிகளின் உறவினை அளவினை அளக்கும் முறைக்கு உடன் தொடர்புக் கெழு பெயர்.

226. X மற்றும் Y மாறிகள் இரண்டும் ஒரே திசையில் மாறினால், **உடன் தொடர்புக்கெழு** எவ்வாறு இருக்கும்? **நேர்மறையாக**

227. ஒரு சிதறல் விளக்கப்படத்தில் ஒரு மாறி அதிகரித்துச் செல்லும்பொழுது மற்றொரு மாறி குறைந்து சென்றால் உடன் தொடர்புக்கெழுவின் அளவு எவ்வாறாக இருக்கும்? **எதிர்மறையாக.**

228. உடன் தொர்புக்கெழு Y– ன் அளவு எந்த எல்லைக்குள் இருக்கும் **-1 மற்றும் 1.**

229. ஒட்டுறவு என்ற கருத்தினை முதலில் பயன்படுத்தியவர் **கால்டன் .**

230. ஒட்டுறவு பகுப்பாய்வுவின் நோக்கம்? **ஒரு காரணியின் மதிப்பினைக் கொண்டு அடுத்து காரணியின் மதிப்பினை கண்டறிவது.**

231. சார்பு மாரியின் மதிப்பினை மதிப்பீடு செய்வதற்காக சாரா மாறிகளை பயன்படுத்தும் செயலுக்கு **ஒட்டுறவு** பெயர் .



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

232. Y = 2 – 0.2X எனில், Y அச்சு வெட்டு **2** ஆகும்.

233. Y = $\beta_0+\beta_1X$ என்ற ஒட்டுறவுச் சமன்பாட்டில் Y என்பது **சார்பு மாறி.**

234. Y = $\beta_0+\beta_1X$ என்ற ஒட்டுறவுச் சமன்பாட்டில் X என்பது **சாரா மாறி.**

235. பொருளாதார அளவையியல் என்பது எதன் இணைப்பு? **பொருளியல், கணிதம் மற்றும் புள்ளியில்.**

236. பொருளாதார அளவையியல் என்ற வார்த்தையை உருவாக்கியவர் ? **ராக்னர் ஃபிரிஸ்க்.**

237. பொருளாதார அளவையியலுக்கான மூலப்பொருள் **புள்ளிவிவரம்.**

238. U என்பது **பிழைக் கருத்து.**

239. U என்பது எதைக் குறிக்கிறது? **விடுபட்ட காரணிகள்.**

240. பொருளாதார அளவையியல் எனபது எத்தனை பாடங்களின் இணைப்பு? **3 பாடங்கள்**

www.Padasalai.Net

## இரண்டு மதிப்பெண் வினா விடை

1. **பேரியல் பொருளியலின் இலக்கணம் தருக.**



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

பேரியல் பொருளாதாரம் என்பது ஒரு முழு பொருளாதாரத்தையும் அதன் போக்கு மற்றும் இயக்கங்களையும் படிக்கின்ற இயல்.

2. பணவீக்கம் என்ற பதத்தின் பொருள் யாது?
   பணவீக்கம் என்பது பொதுவான விலையளவு தொடர்ந்து அதிகரிப்பதை குறிக்கும்.

3. பொருளாதாரம் என்றால் என்ன?
   A.J. பிரவுண் என்பவர், "மக்கள் தங்கள் பிழைப்பை அமைத்துக் கொள்ளும் முறையை குறிப்பது" என்று வரையறுத்துள்ளார்.

4. வளர்ச்சி நிலை அடிப்படையில் பொருளாதாரத்தை வகைப்படுத்துக.
   வளர்ந்த, வளராத, முன்னேறாத மற்றும் வளரும் பொருளாதார அமைப்புகள் என வகைப்படுத்தப்படுகிறது.

5. முதலாளித்துவம் என்றால் என்ன?
   முதலாளித்துவம் என்பது பொருளாதார நடவடிக்கைகளை தீர்மானிப்பதில் தனியார் பங்கு அதிகமாகவும் அரசின் பங்கு குறைவாகவும் இருக்கும் அமைப்பு ஆகும்.

6. பொருளாதார மாதிரியின் இலக்கணம் தருக.
   பொருளாதார மாதிரி என்பது பொருளாதார நடவடிக்கையின் உண்மைச் சூழலை எளிமையாக புரிய வைப்பதாகும்.

7. "வருமானத்தின் வட்ட ஓட்டம்" வரையறு
   வருமானத்தின் வட்ட ஓட்டம் என்பது அந்த பொருளாதாரத்தின் பல்வேறு துறைகளுக்கிடையே உள்ள தொடர்பை விளக்குவதாகும்.

8. தேசிய வருவாய் இலக்கணம் தருக.
   தேசிய வருவாய் என்பது ஒரு நாட்டின் உள்ள உழைப்பும் முதலும் சேர்ந்து அங்குள்ள இயற்கை வளங்களைப் பயன்படுத்தி பண்டங்கள் மற்றும் பணிகளைப் பயன்படுத்துகின்றன. இதுவே, அந்நாட்டின் நிகர ஆண்டு வருமானம், தேசிய வருவாய் அல்லது தேசிய ஈவுத் தொகை ஆகும். - ஆல்பிரட் மார்ஷல்

9. GNP கணக்கிடும் சூத்திரத்தை எழுதுக.
   GNP=GDP+வெளிநாட்டிலிருந்து கிடைக்கும் நிகர வருமானம்

10. NNP க்கும் NDP க்கும் உள்ள வேறுபாடு யாது?

| NNP | NDP |
|---|---|
| NNP=GNP- தேய்மான கழிவு | NDP=GDP-தேய்மானம் |

11. GNP க்கும் NNP க்கும் உள்ள தொடர்பினை எழுதுக.
   1.GNP=GDP- வெளிநாட்டிலிருந்து கிடைக்கும் நிகர வருவாய்
   2.NNP=GNP- தேய்மானம்

12. தனிநபர் வருமானம் என்றால் என்ன?
   தனிநபர் வருமானம் என்பது ஒரு ஆண்டில் ஒரு நாட்டில் வசிக்கும் ஒவ்வொரு தனி நபருக்கும் பல வழிகளில் இருந்து கிடைக்கப்பெறும் வருமானம் ஆகும்.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

13. GDP குறைப்பான் இலக்கணம் தருக.
GDP குறைப்பான் என்பது GDP யில் குறிப்பிட்டுள்ள பண்டங்கள் மற்றும் பணிகளின் விலை மாற்ற குறியீட்டெண் ஆகும்

$$\text{GDP குறைப்பான்} = \frac{\text{பணமதிப்பு GDP}}{\text{உண்மை GDP}} \times 100$$

14. தேசிய வருவாய் கணக்கீட்டில் "சுய நுகர்வு" எவ்வாறு சிரமத்தை தருகிறது?
விவசாயிகள் தங்களின் சுய நுகர்விற்காக உற்பத்தியில் ஒரு பகுதியை ஒதுக்கி வைக்கின்றனர். சந்தையில் விற்பனை செய்யாமல் ஒதுக்கிய உற்பத்தி தேசிய வருமானத்தில் சேர்க்கப்பட்டதா என்பதை கண்டறிவதில் சிக்கல் ஏற்படுகிறது.

15. முழு வேலைவாய்ப்பு வரையறு
கீன்ஸின் கூற்றுப்படி முழு வேலை நிலை என்பது விருப்பமில்லா வேலையின்மை இல்லாமல் இருப்பது ஆகும்.

16. ஊரக வேலையின்மையின் முக்கிய இயல்பு யாது?
1.பருவ கால வேலையின்மை நிலவுகிறது
2.மறைமுக வேலையின்மை நிலவுகிறது.

17. உடன்பாடில்லா வேலையின்மை (Frictional) பற்று சிறுகுறிப்பு வரைக.
உழைப்பாளர்களின் தேவை மற்றும் அளிப்பில் சமநிலையற்ற தன்மை நிலவுவதால் தற்காலிக அல்லது பிறழ்ச்சி வேலையின்மை ஏற்படுகிறது.

18. தற்போதுள்ள சூழலில் ஆள் குறைப்பிற்கான காரணத்தைத் தருக.
1. புதிய தொழில் நுட்பம் மூலதன செறிவு உடையதாக இருப்பதால், குறைந்த எண்ணிக்கையில் உழைப்பாளர்கள் தேவைப்படுகின்றனர்.
2. புதியன கண்டுபிடித்தலும், புதிய கருத்துக்களும் வேலைவாய்ப்பினை உருவாக்கும்.

19. சேவிதியின் எடுகோள்களை பட்டியலிடுக.
1. முழு வேலை நிலை நிலவும்.
2. சந்தையில் நிறைவுப் போட்டி நிலவும்
3. கூலி மற்றும் விலையில் நெகிழ்வுத் தன்மை உண்டு.

20. விளைவுத் தேவை என்றால் என்ன?
விளைவுத் தேவை என்பது உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களின்மீது உண்மையிலே செலவு செய்கிற பணத்தின் அளவு ஆகும். ED=Y+C+I=வெளியீடு= வேலைவாய்ப்பு

21. தொகு அளிப்பின் கூறுகள் யாவை?
1. மொத்த நுகர்வுச் செலவு
2. மொத்த தனியார் சேமிப்பு
3. நிகர வரி வசூல்
4. உதவித் தொகை

தொகு அளிப்பு = C+S+T+Rf



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

22. நுகர்வு சார்பு என்றால் என்ன?
வருவாய்க்கும், நுகர்வுக்கும் உள்ள தொடர்பே நுகர்வு சார்பு எனப்படும். C=f(Y)

23. நுகர்வு நாட்டம் என்றால் என்ன?
வருவாய்க்கும் நுகர்வுக்கும் உள்ள தொடர்பே நுகர்வு நாட்டம். வருவாயை முழுவதுமாகவோ அல்லது ஒரு பகுதியாகவோ செலவு செய்வது நாட்டம்.

24. சராசரி நுகர்வு நாட்டம் (APC) – வரையறு.
வருமானத்திற்கும் நுகர்வுக்குமான வீதமே சராசரி நுகர்வு நாட்டமாகும். APC=C/Y

25. இறுதி நிலை நுகர்வு நாட்டம் (MPC) -வரையறு
வருமதான மாற்றத்திற்கும், நுகர்வு மாற்றத்திற்கிடையேயான வீதமே இறுதிநிலை நுகர்வு நாட்டம் எனப்படும். MPC = $\Delta C/\Delta Y$

26. சேமிப்பு நாட்டம் (Propensity to save) என்றால் என்ன?
வருமானத்திற்கும், சேமிப்பிற்கும் இடையே உள்ள தொடர்பே சேமிப்பு நாட்டம் ஆகும். S/Y

27. சராசரி சேமிப்பு நாட்டம் (APS) – வரையறு.
வருமானத்திற்கும், சேமிப்பிற்கும் இடையேயான வீதமே சராசரி சேமிப்பு நாட்டம் எனப்படும். APS=S/Y

28. இறுதி நிலை சேமிப்பு நாட்டம் (MPS) – வரையறு.
வருமான மாற்றத்திற்கும், சேமிப்பு மாற்றத்திற்கும் இடையே உள்ள வீதமே இறுதிநிலை சேமிப்பு நாட்டமாகும். MPS=$\Delta S/\Delta Y$

29. பெருக்கி வரையறு
தேசிய வருமானத்தின் மாற்றத்திற்கும் முதலீட்டில் ஏற்படும் மாற்றத்திற்கும் உள்ள வீதத்தை பெருக்கி என்று வரையறுக்கலாம். K=$\Delta Y/\Delta I$

30. முடுக்கி வரையறு
தூண்டப்பெற்ற முதலீட்டிற்கும் தொடக்கத்தில் நுகர்வுச் செலவில் ஏற்படும் மாற்றத்திற்கும் இடையே உள்ள விகிதம் முடுக்கி எனப்படும். ___ கே.கே. குரிஹாரா
முடுக்கி =$\Delta I/\Delta C$

31. பணத்தின் இலக்கணம் தருக.
பணம் எதைச் செய்கிறதோ அதுதான் பணம் - வாக்கர்

32. பண்ட மாற்று என்றால் என்ன?
பண்டங்களுக்கு பண்டம் மாற்றிக் கொள்ளும் முறையே பண்ட மாற்றுமுறை என அழைக்கப்பட்டது.

33. பண்டப்பணம் என்றால் என்ன?
தேவைப்போக உபரியாக இருந்த பொருளை பரிமாற்ற பொது இடையூட்டுக் கருவிகளாக தோல், உரோமம், உப்பு, அரிசி, கோதுமை, பாத்திரம், ஆயுதம், பணமாக பயன்படுத்தப்பட்டது.

34. பொன் திட்டம் என்றால் என்ன?
ஒரு பணத்தின் அலகு ஒரு குறிப்பிட்ட எடையிலான பொன் அளவினால் வரையறுக்கப்பட்டிருந்தது.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

35. நெகிழிப் பணம் என்றால்? உதாரணம் தருக.

நெகிழி அட்டையால் உருவாக்கப்பட்ட நெகிழிப்பணம் நடைமுறையில் காகிதப் பணத்திற்கு ஒரு மாற்றமாகும். (உதாரணம்: கடன் அட்டை, ரொக்க அட்டை)

36. பணவீக்கத்தின் இலக்கணம் தருக.

"குறைந்த அளவு பண்டங்களை அதிகளவு பணம் துரத்தும் நிலை" ___ கோல்பர்ன்

37. தேக்க வீக்கம் என்றால் என்ன?

பொருளாதார வளர்ச்சியில் தேக்கநிலையும், வேலையின்மையும், அதிக அளவிலான பணவீக்கமும் ஒன்றிணைந்த சூழ்நிலை ஆகும்.

38. வணிக வங்கிகள் என்பதனை வரையறு.

வணிக வங்கிகள் மக்களிடமிருந்து வைப்புகளை பெற்று நிறுவனங்களுக்கு குறுகிய கால கடனளித்து லாப நோக்கில் செயல்படும் நிதி அமைப்பு.

39. கடன் உருவாக்கம் என்றால் என்ன?

கடன் உருவாக்கம் என்பது கடன்களையும் முன்பண அளிப்பினையும் அதிகரிக்கும் ஒரு செயல்.

40. மைய வங்கி என்பதனை வரையறு.

மைய வங்கியானது வங்கிகளின் வங்கி, மேலும் நாட்டின் பண அளிப்பை கட்டுப்படுத்துவதும், வட்டி விகிதம் ஆகியவற்றை நிர்வகித்து, வணிக வங்கிகளையும் மேற்பார்வை செய்யும் அமைப்பு ஆகும்.

41. CRR மற்றும் SLR ஆகியவற்றினை வேறுபடுத்துக.

CRR (ரொக்க இருப்பு விகிதம்) வணிக வங்கிகள் தங்களின் வைப்புகளில் (Deposits) குறிப்பிட்ட விகிதத்தை மைய வங்கியில் இருக்க வேண்டும்.

SLR (சட்ட பூர்வ நீர்மை விருப்பம்) வணிக வங்கிகள் தன்னிடம் வைக்க வேண்டிய நீர்மை சொத்து விகிதம்.

42. வெளி அங்காடி நடவடிக்கைகள் என்பதன் பொருள் கூறுக.

மைய வங்கி பொதுச் சந்தையில் அரசின் கடன் பத்திரங்கள் வெளியிடுவதும் திரும்ப பெறுவதும் வெளிச் சந்தை நடவடிக்கை எனப்படுகிறது.

43. கடன் விநியோக பகிர்வு என்றால் என்ன? (அல்லது) கடன் பங்கீடு என்றால் என்ன?

இது ஒரு பழமையான கடன் கட்டுப்பாட்டு முறையாகும். வணிக வங்கிகள் கடன் அளிக்கும் நோக்கம் பலவகைப்படும். பண அளிப்பு சூழ்நிலைக்கு ஏற்ப நோக்கங்களைப் பட்டியலிட்டு கடன் கட்டுபாடு ஏற்படுத்தும்.

44. விவசாய கடன் வழங்கும் துறையின் பணிகளை குறிப்பிடுக.

(1)நிபுணர்கள் மூலம் விவசாய கடன் சார்ந்த வினாக்களை ஆய்வு செய்வது.

(2)மைய, மாநில கூட்டுறவு வங்கி நடவடிக்கைகளில் நிபுணத்துவம் உள்ள ஆலோசனை வழங்குதல்.

(3)ஊரக துறைக்கு தகுதி வாய்ந்த நிறுவனம் மூலம் விவசாயக் கடன்.

45. பன்னாட்டு பொருளியல் என்றால் என்ன?

பன்னாட்டு பொருளியல் என்பது பொருட்கள் மற்றும் பணிகள் நாடுகளுக்கிடையே பரிமாற்றம் செய்வது பற்றிய பாடப்பிரிவு ஆகும்.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

46. பன்னாட்டு வாணிகம் வரைவிலக்கணம் தருக.

பன்னாட்டு வாணிகம் என்பது பொருட்கள் மற்றும் பணிகளை இரு அல்லது அதற்கு மேற்பட்ட நாடுகள் பரிமாற்றம் செய்து கொள்வது ஆகும்.

47. பன்னாட்டு வாணிகத்தின் நன்மைகளில் ஏதேனும் இரண்டு குறிப்பிடுக.

1. நாடுகளிடையே விலை சமனடைதல்
2. பற்றாக்குறையுள்ள வளங்களை சமமாக பகிர்தல்.

48. பன்னாட்டு வாணிகத்தின் அடிப்படைகளை விளக்குவதில் ஆடம் ஸ்மித்துக்கும், டேவிட் ரிக்காடோவுக்கும் உள்ள வேறுபாடு என்ன?

1. ஆடம் ஸ்மித் : குறைந்த தனி அடக்கச் செலவில் பொருள் உற்பத்தி செய்யும் நாடுகள் பன்னாட்டு வாணிபத்தின் மூலம் நன்மை அடையும்.
2. டேவிட் ரிக்கார்டோ : குறைந்த ஒப்புமை செலவில் பொருள் உற்பத்தி செய்யும் நாடுகள் பன்னாட்டு வாணிபத்தின்மூலம் நன்மை அடையும்.

49. வாணிப வீதத்தினை விளக்குக.

ஏற்றுமதி பொருளின் விலைக்கும் இறக்குமதி பொருளின் விலைக்குமிடையான விகிதமே வாணிப வீதம் எனலாம்.

50. வாணிப செலுத்துநிலை பற்றி நீவிர் அறிவது யாது?

ஒரு நாடு ஒரு குறிப்பிட்ட காலத்தில் உலக நாடுகளுடன் மேற்கொள்ளும் பொருளாதார பரிவர்த்தனை அறிக்கை.

51. செலாவணி மாற்று வீதம் என்றால் என்ன?

ஒரு அலகு வெளிநாட்டு பணத்தை பெறுவதற்கு எத்தனை அலகு உள்நாட்டுப் பணத்தை கொடுக்கிறோம். உதாரணம்: ஒரு அமெரிக்க டாலர் 1 டாலர் = ரூ75 இந்திய ரூபாய்.

52. சிறப்பு எடுப்புரிமைகள் என்பதன் பொருளை எழுதுக.

1. தாள் தங்கம் என்று அழைக்கப்படும்.
2. IMF ன் கட்டளைப் பணமாகும்.
3. உலக வைப்பு நாணயம்

53. ஆசியானின் (ASEAN) இரண்டு நோக்கங்களை எழுதுக.

1.பொருளாதார வளர்ச்சி, சமூக வளர்ச்சி துரிதப்படுத்துவது.

2.கல்வி, பயிற்சி மற்றும் ஆராய்ச்சிக்கு தகுந்த வசதிகளை உறுப்பு நாடுகளில் அமைத்துக் கொடுப்பது.

54. ஐபிஆர்டி (IBRD) யின் ஏதேனும் இரண்டு கடன் திட்டங்களின் பெயர்களை சுட்டிக் காட்டுக.

1. வங்கியின் இருப்பில் உள்ள சொந்த நிதியிலிருந்து கடன் வழங்குகிறது.
2. கடன் நிதியிலிருந்து கடன் வழங்குகிறது.

55. பொது சந்தை வரையறு.

புவியின் குறிப்பிட்ட பகுதியில் அமைந்துள்ள நாடுகள் தடையற்ற வாணிகம் மற்றும் உற்பத்திக் காரணிகள் இடப்பெயர்வுக்காக அமைக்கும் அமைப்பே பொதுசந்தை. உதா. ECM



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

56. தடையற்ற வாணிகப் பகுதி என்றால் என்ன?

ஒப்பந்தத்தில் கையொப்பமிட்ட உறுப்பினர் நாடுகள் அனைத்தும் ஒரே மண்டலமாகக் கருதி வாணிகத் தடைகளை குறைக்க ஒத்துழைக்கும். உதா. SAFTA, EFTA

57. எங்கு, எப்போது, எப்பொழுது சார்க் தலைமை அலுவலகம் துவக்கப்பட்டது?

1. சார்க் தலைமையகம் நேபாள் தலைநகரம் காட்மண்டு-ல் உள்ளது.
2. ஜனவரி, 1987 ல் செயல்பட துவங்கியது.

58. உலக வங்கிக் குழுமத்தின் கீழ் செயல்படும் இரண்டு துணை நிறுவனங்களின் பெயர்களை குறிப்பிடுக.

1.பன்னாட்டு மேம்பாட்டு அமைப்பு (IDA)

2.பன்னாட்டு நிதிக் கழகம் (IFC)

59. "பொது நிதி" வரையறு.

"அரசின் வருவாய் மற்றும் செலவுகளின் இயல்பையும் கொள்கைகளையும் ஆராய்வதே பொதுநிதியியல் ஆகும்" —— ஆடம் ஸ்மித்

60. பொது வருவாய் என்றால் என்ன?

அரசின் வரி மற்றும் வரியில்லா வருமானங்கள் பற்றியது பொது வருவாய் எனப்படும்.

61. "வரி" "கட்டணம்" வேறுபடுத்து?

| வரி | கட்டணம் |
|---|---|
| 1.அரசுக்கு கட்டாயம் செலுத்தப்படுவது | 1. கட்டாயம் செலுத்தக்கூடியது அல்ல |
| 2.அரசிடம் எவ்வித நன்மையையும் எதிர்பாராமல் செலுத்த வேண்டியது | 2. அரசானது சில சேவையைச் செய்வதற்காக கட்டணங்களை வசூலிக்கிறது. |
| 3.GST, வருமான வரி | 3.பாஸ்போர்ட், ஓட்டுநர் உரிமம் |

62. பூஜ்ய அடிப்படை வரவு செலவுத் திட்டம் குறிப்பு வரைக.

1. ஒவ்வொரு ஆண்டும் ஒரு புதிய ஆண்டாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது.
2. ஒவ்வொரு செலவினமும் புதியதாகக் கருதப்பட்டு ஒவ்வொரு ஆண்டும் புதிய மதிப்பீடுகள் செய்யப்படும்.

63. நேர்முக வரிக்கு இரு உதாரணம் தருக.

1. வருமான வரி 2. சொத்து வரி

64. GST யின் கூறுகள் யாவை?

1.CGST 2.SGST 3.IGST

65. "பொதுக்கடன்" என்பதன் பொருள் யாது?

அரசானது பொதுமக்கள் மற்றும் தனியார் துறையிலுள்ள தனி நபர்கள் அல்லது நிறுவனங்களிடம் பெறுவதாகும்.

66. சுற்றுச்சூழல் என்பதன் பொருள் கூறுக.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

நம்மை சுற்றியுள்ள காற்று, நீர், நிலம், இயற்கை வளங்கள், தாவரங்கள் மற்றும் அனைத்து உயிரினங்கள் அடங்கிய தொகுப்பு மற்றும் அத்தொகுப்பில் உள்ளவைகளுக்கு இடையேயான பரஸ்பர உறவு பற்றியது.

67. சூழலியல் என்றால் என்ன?

உயிரினங்களுக்கு இடையேயான பரஸ்பர உறவும், அவையின் சுற்றுச்சூழலையும்ப் பற்றி படிக்கும் இயல்.

68. தலா கரியமில வாயு அதிகமாக வெளியேறும் நாடுகள் யாவை?

1. கத்தார்
2. குவைத்
3. ஓமன்
4. கனடா
5. ஐக்கிய அரபு நாடுகள்

69. சுற்றுச் சூழல் பொருட்கள் என்றால் என்ன? உதாரணம் தருக.

சந்தையில்லாத, தனியார் சொத்துரிமை இல்லாத பொருட்கள்

1. தூய்மையான காற்று
2. பசுமையான போக்குவரத்து உள்கட்டமைப்பு
3. பொது பூங்காக்கள்
4. ஆறுகள்
5. மலைகள்
6. கடற்கரை

70. ஒலி மாசுவினை கட்டுப்படுத்துவதற்கான வழிமுறைகளைக் கூறுக.

1. ஒலித்தடைகளை ஏற்படுத்துதல்
2. ஒலிப்பெருக்கிகளைக் கட்டுப்படுத்துதல்
3. போக்குவரத்து நெரிசல் கட்டுப்பாடு

71. உலக வெப்பமயமாதல் என்பதனை வரையறு?

பல்வேறு மனித நடவடிக்கைகளின் காரணமாக இயல்பினை விட பூமி மற்றும் வளிமண்டலத்தில் தற்போது அதிகரிக்கும் வெப்பநிலையையே புவிவெப்பமயமாதல் என்கிறோம்.

விளைவு: பனிப்பாறைகள் உருகி கடல் மட்டம் உயரும். இதனால் நிலப்பகுதி கடலில் மூழ்கும் அபாயம்.

72. விதைப் பந்து என்பதன் பொருள் தருக.

ஒரு விதை உரம் கலந்த களிமண்ணால் மூடிவைக்கப்பட்டு பிறகு உலர்த்தப்படுகிறது. இதை எங்கு வேண்டுமோ அங்கு விதைக்கலாம்.

73. பொருளாதார முன்னேற்றம் வரையறு.

நாட்டின் பொருளாதார கட்டமைப்பில் நிகழும் நல்ல மாற்றங்களை பொருளாதார முன்னேற்றம் எனலாம்.

74. பொருளாதார முன்னேற்றத்தின் குறியீடுகளைக் குறிப்பிடுக.

(1) நாட்டின் மொத்த உற்பத்தி (GNP)
(2) நலன்
(3) தலா மொத்த நாட்டு உற்பததி
(4) சமூகக் குறியீடுகள்

75. பொருளாதார வளர்ச்சியிலிருந்து முன்னேற்றத்தை வேறுபடுத்துக.



www.Padasalai.Net

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

| பொருளாதார வளர்ச்சி | பொருளாதார முன்னேற்றம் |
|---|---|
| (1)வளர்ந்த நாடுகளின் பொருளாதார பிரச்சனைகளைக் கையாளுகிறது | (1)வளரும் நாடுகளின் பொருளாதார பிரச்சனைகளைக் கையாளுகிறது. |
| (2)எண்ணிக்கை அடிப்படையிலானது. | (2)எண்ணிக்கை மற்றும் தர அடிப்படையிலானது. |

76. மொத்த நாட்டு உற்பத்தி என்றால் என்ன?

ஒரு நாட்டின் எல்லைக்குள் ஒரு குறிப்பிட்ட ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்கள் மற்றும் பணிகளின் மதிப்புடன் வெளிநாட்டு வருமானத்தின் மொத்த மதிப்பே மொத்த நாட்டு உற்பத்தி எனலாம்.

77. பொருளாதார திட்டமிடுதலின் வரைவிலக்கணத்தை எழுதுக.

பொருளாதார திட்டமிடல் என்பது தனியார் உற்பத்தி மற்றும் விநியோக நடவடிக்கைகளை கூட்டாக கட்டுப்படுத்துவது அல்லது ஒழுங்குபடுத்துவதைக் குறிப்பதாகும் - ராபின்ஸ்

78. பொருளாதார முன்னேற்றத்தின் சமூகக் குறியீடுகளை பட்டியிடுக.

மக்களின் சுகாதாரம், கல்வி, உணவு, குடிநீர் துப்புரவு மற்றும் வீட்டுவசதி ஆகியவையாகும்.

79. நிதி ஆயோக் பற்றி குறிப்பு வரைக.

1.நிதி ஆயோக் என்பது இந்தியாவை உருமாற்றம் செய்வதற்கான தேசிய நிறுவனம் என கருதலாம்.

2.இந்திய அரசு இதனை திட்டக்குழுவிற்கு பதிலாக (ஆகஸ்ட் 13, 2014 உருவாக்க முடிவெடுத்து) ஜனவரி 1 2015ல் அமைக்கப்பட்டது.

80. புள்ளியியல் என்றால் என்ன?

புள்ளியியல் என்பது மதிப்பீடுகளை மற்றும் நிகழ்வுத்தகவுகளைப் பற்றிய அறிவியல்

\- போடிங்டன்

\-

81. புள்ளியியலின் வகைகள் யாவை?

புள்ளியியலின் வகைகள்

விவரிப்பு புள்ளியியல் | உய்த்துணர்பு புள்ளியியல்

82. உய்த்துணர்வு புள்ளியில் என்றால் என்ன?

கூறுவின் விவரங்களை பகுப்பாய்வு செய்து அதனை முழு தொகுப்பின் விவரங்களுக்கு அறிந்து கொள்வதாகும்.

83. புள்ளி விவரங்கள் வகைகள் யாவை?

புள்ளி விவரங்கள் இருவகைப்படும்.

அவை 1. அளவு விவரங்கள்

2.பண்பு விவரங்கள்

84. உடன் தொடர்பு பகுப்பாய்வு என்பதனை வரையறு.

உடன் தொடர்பு பகுப்பாய்வு என்பது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாறிகள் எவ்வாறு ஒன்றுடன் ஒன்று தொடர்பு கொண்டு மாறுகிறது என்பதை கணக்கிடுவதாகும்.

85. ஒட்டுறவு என்பதனை வரையறு

ஒட்டுறவு என்பது இரு மாறிகளுக்கிடையே உள்ள உறவை விளக்குகிறது.

www.Padasalai.Net



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

86. பொருளாதார அளவையியல் என்றால் என்ன?

பொருளாதார அளவையில் என்பது பொருளியல், புள்ளியியல் மற்றும் கணிதம் ஆகிய மூன்றின் ஒருங்கிணைப்பாகும்.

www.Padasalai.Net

## 3 மதிப்பெண் வினா விடை

1. பேரியல் பொருளாதாரத்தின் முக்கியத்துவத்தை தருக: (மெல்ல கற்கும் மாணவர்களுக்கு ஏதேனும் - 3)



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

பேரியல் பொருளாதாரத்தின் முக்கியத்துவம்:

1. பொருளாதார செயல்பாடு புரிந்துகொள்ள, யுக்திகள் மாற்ற,பிரச்சினைகளுக்கு தீர்வு காண பயன்படும்.
2. எதிர்கால பிரச்சினை புரிந்துகொண்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்க பயன்படும்.
3. பிரச்சினைகளை அறிவியல் பூர்வமாக அறிய பயன்படும்.
4. நெருக்கடி தீர்க்க, கொள்கை உருவாக்க, எதிர்காலம் முன் கணிக்க பயன்படும்.

2. பொருளாதார அமைப்பின் வகைகளை குறிப்பிடுக. (மெல்ல கற்கும் மாணவர்களுக்கு தலைப்பு மட்டும் எழுதவும்)

பொருளாதார அமைப்பின் வகைகள்:

1. முதலாளித்துவ பொருளாதாரம் :
   முதலாளித்துவ பொருளாதாரம் என்பது தனியாரின் பங்கு அதிகமாகவும், அரசின் பங்கு குறைவாகவும் இருப்பதைக் குறிக்கும்.
2. சமத்துவ பொருளாதாரம்:
   சமத்துவ பொருளாதாரம் என்பது உற்பத்தியின் அனைத்து செயல்பாடுகளும் அரசின் முழுக் கட்டுப்பாட்டில் இருக்கும்.
3. கலப்புப் பொருளாதாரம்:
   கலப்புப் பொருளாதாரம் என்பது முதலாளித்துவம் மற்றும் சமத்துவம் ஆகிய இரண்டின் இயல்புகளையும் உள்ளடக்கியது.

3. முதலாளித்துவத்தின் சிறப்பினை வரிசைப்படுத்துக. (மெல்ல கற்கும் மாணவர்கள் தலைப்பு மட்டும் எழுதவும்)

முதலாளித்துவத்தின் சிறப்புகள்:

1. தனியார் சொத்துரிமை மற்றும் பரம்பரைச் சட்டம் 2. இலாப நோக்கம் 3. போட்டியில் சுதந்திரம் 4. தேர்ந்தெடுப்பதில் சுதந்திரம் 5. விலை இயங்கும் முறை 6. அரசின் பங்கு குறைவு 7. வருமான ஏற்றத்தாழ்வு

(முதல் 3 தலைப்புக்கான விளக்கம்)

1. முதலாளித்துவத்தின் அனைத்து வளங்களும் தனி நபர்களுக்கு சொந்தமானது. உரிமையாளர்கள் இறப்பிற்கு பின் அவர்களின் வாரிசுகளுக்கு மாற்றப்படும்.
2. முதலாளித்துவத்தில் இலாப நோக்கததில் அதிக லாபம் தரும் பொருட்களையே உற்பத்தி செய்வார்கள்.
3. முதலாளித்துவத்தில் பொருட்கள் உற்பத்தி மற்றும் விற்பனையில் அரசின் தலையீடு இல்லாமல் இருப்பதால் ஆரோக்கியமான போட்டி நிலவும்.

4. சமத்துவத்தின் குறைகளைக் கூறுக. (மெல்ல கற்கும் மாணவர்கள் தலைப்பு மட்டும் எழுதவும்)

சமத்துவத்தின் குறைகள்:

1. சிகப்பு நாடா மற்றும் அதிகார வர்க்கம் 2. ஊக்கமில்லாமை 3. தெரிவு செய்தில் சுதந்திரம் குறைவு 4. அதிகாரம் குவிதல்

(முதல் 3 தலைப்புக்கான விளக்கம்)

1. சமத்துவத்தில் முடிவெடுப்பதில் அரசும், அனுமதி வழங்குவதில் அதிகாரிகள் காலதாமதம் செய்வது சிகப்பு நாடா நிலையாகும்.
2. சமத்துவத்தில் மிகப்பெரிய குறை என்பது திறமைக்கு எந்த ஊக்கமும் அளிப்பதில்லை. எனவே உற்பத்தி பாதிக்கப்படுகிறது.
3. சமத்துவத்தில் பண்டங்கள் மற்றும் பணிகளை தெரிவு செய்வதில் நுகர்வோருக்கு சுதந்திரம் இல்லை.

5. கலப்பு பொருளாதாரத்தின் முக்கிய இயல்புகளை எடுத்தெழுதுக. (மெல்ல கற்கும் மாணவர்கள் தலைப்பு மட்டும் எழுதவும்)



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

கலப்பு பொருளாதாரத்தின் முக்கிய இயல்புகள்
1. சொத்து, உற்பத்திச் சாதனங்களின் உரிமம்
2. பொது மற்றும் தனியார் துறைகள் இணைந்திருத்தல்.
3. பொருளாதார திட்டமிடல்
4. பொருளாதார பிரச்சினைக்கு தீர்வு
5. சுதந்திரமும், கட்டுப்பாடும்

(முதல் 3 தலைப்புக்கான விளக்கம்)

1. சொத்து, உற்பத்திச் சாதனங்களின் கொள்முதல் பயன்படுத்துதல், விற்கும் உரிமை இருதுறைக்கும் உண்டு.
2. கலப்புப் பொருளாதாரத்தில் தனியார் துறை இலாப நோக்கத்திற்காகவும், பொதுத்துறை சமூக நலனை மேம்படுத்தவும் செயல்படுகிறது.
3. கலப்பு பொருளாதாரத்தில் அரசின் திட்டங்களை தனியார் துறையும், பொதுத்துறையும் மதித்துப் பின்பற்றும்.

6. முதலாளித்துவம் மற்றும் சமத்துவத்தை வேறுபடுத்துக.

| முதலாளித்துவம் | சமத்துவம் |
|---|---|
| 1. வளங்கள் அனைத்தும் தனியார் வசம் இருக்கும் | 1. வளங்கள் அனைத்தும் அரசுக்கு சொந்தமானது |
| 2. முக்கிய குறிக்கோள் இலாப நோக்கம் | 2.முக்கிய குறிக்கோள் சமூக நலன் |
| 3. வருவாய் பங்கீடு சமமற்ற நிலையில் இருக்கும். | 3.வருவாய் பங்கீடு சமநிலையில் இருக்கும். |

7. இருதுறை சூழல் ஓட்ட மாதிரியினை விளக்குக.
இருதுறை சூழல் ஓட்ட மாதிரி பொருளாதாரத்தில் இல்லத்துறை மற்றும் நிறுவனத்துறை என்ற இரு துறைகள் மட்டும் காணப்படும்.
(1) இல்லத்துறை :இத்துறையில் அனைத்து வருவாயையும், நிறுவனத்துறை தயாரிக்கும் பொருட்கள் மற்றும் பணிகளை வாங்க பயன்படுத்தப்படுகிறது.
(2) நிறுவனத்துறை : இத்துறையானது பொருள் மற்றும் பணிகளை இல்லத்துறைக்கு விற்பனை செய்வதன் மூலம் வருவாயை ஈட்டுகிறது.

8. தலைவீத வருமானம. பற்றி ஒரு குறிப்பு வரைக.
தலைவீத வருமானம்:
1. ஓர் ஆண்டில் ஒரு நாட்டில் வசிக்கும் ஒரு நபரின் சராசரி ஆண்டு வருமானம் ஆகும்.
2. தேசிய வருமானத்தை மக்கள் தொகையில் வகுக்கக் கிடைப்பது தலா வருமானம்.
3. தலா வருமானத்தை தலைவீத வருமானம் என்றும் அழைக்கலாம்.

9. தனிநபர் வருமானத்திற்கும், செலவிடக்கூடிய வருமானத்திற்கும் உள்ள வித்தியாசம் என்ன?

| தனிநபர் வருமானம் | செலவிடக்கூடிய வருமானம் |
|---|---|
| ஓர் ஆண்டில் ஒரு நாட்டில் வசிக்கும் ஒவ்வொரு தனிநபருக்கு பல வழிகளில் இருந்து கிடைக்கப்பெறும் மொத்த வருமானம் தனிநபர் வருமானம் ஆகும். | தனிநபர் வருமானத்திலிருந்து நேர்முக வரிகளைக் கழித்தால் கிடைப்பது செலவிடக்கூடிய வருமானம் ஆகும். |



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

10. காரணி செலவில் NNP – விவரி.
   1. NNP என்பது உற்பத்தியின் சந்தை மதிப்பு ஆகும். காரணி செலவில் NNP என்பது உற்பத்தி காரணிகளுக்கு வழங்கப்பட்ட மொத்த வருமான செலுத்துதல் ஆகும்.
   2. காரணி செலவில் NNP = சந்தை விலையில் NNP - மறைமுக வரி + மானியம்.

11. செலவுமுறை பற்றி ஒரு சிறு குறிப்பு எழுதுக.
   1. செலவு முறையில் ஓர் ஆண்டில் சமுதாயத்தில் உள்ளவர்களால் மேற்கொள்ளப்படும் மொத்த செலவுகள் அனைத்தையும் கூட்டி தேசிய வருவாய் கணக்கிடப்படுகிறது.
   2. மொத்த செலவு கீழ்க்கண்ட சமன்பாட்டின் மூலம் கணக்கிடப்படுகிறது.

   GNP = C+I+G+(X-M)

   C-தனியார் நுகர்வுச் செலவு G-அரசின் கொள்முதல் செலவு

   I-தனியார் முதலீட்டுச் செலவு (X-M)- நிகர ஏற்றுமதி

12. தேசிய வருவாய் கணக்கிடுதலில் "இருமுறை கணக்கீடு" பிரச்சினைக்கு தீர்வு என்ன?
   (மெல்ல கற்கும் மாணவர்கள் 2 வது Point மட்டும் எழுதவும்.
   1. ஒரு துறையின் வெளியீடு மற்றொரு துறைக்கு உள்ளீடாகச் செல்ல வாய்ப்பு இருப்பதால் ஒரே பொருள் இருமுறை அல்லது பலமுறை கணக்கில் வரவாய்ப்பு உள்ளது. இதற்கு இருமுறை கணக்கிடல் என்று பெயர்.
   2. இதனை தவிர்க்க இறுதி பொருட்களின் மதிப்பையோ அல்லது ஒவ்வொரு துறையிலும் ஏற்பட்ட மதிப்பு கூட்டலையோ கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

13. தேசிய வருவாய் மற்றும் பொது நலன் ஆகியவற்றைப் பற்றி சுருக்கமாக எழுதுக.
   (ஏதேனும் 3 Point எழுதவும்)
   1. ஒரு நாட்டின் வளர்ச்சியும் பொருளாதார அந்தஸ்தும் அந்நாட்டின் தேசிய வருவாயைப் பொறுத்தே அமைகிறது.
   2. அதிக தலை வீத வருமானம் உடைய நாடு, நல்ல வாழ்க்கை தரத்துடன் அதிக பொருளாதார நலனையும் பெற்றதாக இருக்கும்.
   3. ஆனால் GDP அல்லது தலைவீத வருமானம் அதிகரித்தால் பொருளாதார நலனும் அதிகரிக்க வேண்டும்.
   4. (ஏதேனும் 3 Point எழுதவும்)

   இயற்கை வளங்களை மாசுபடுத்தி அதிக GNP பெறுதல், இராணுவத் தளவாடஙக்ள அதிக அளவு உற்பத்தி செய்தல் ஆகியவை பொதுநலனை பாதிக்கும் அம்சங்கள் ஆகும்.

14. தேசிய வருவாயின் பயன்களைப் பட்டியலிடுக. (ஏதேனும் 3 Point எழுதவும்)
   1. ஒரு நாட்டின் பொருளாதார செயல்திறனை தேசிய வருவாய் விளக்குகிறது.
   2. பொருளாதார வல்லுநர்கள் திட்டமிட நாட்டின் பல்வேறு நோக்கங்களுக்காக இந்த தேசிய வருமான புள்ளி விவரங்கள் பயன்படுகிறது.
   3. மக்களின் வாழ்க்கைத்தரம் அதிகரித்துள்ளதா என்பதை கண்டறிய தேசிய வருவாய் உதவுகிறது.
   4. மேலும் பிற நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தோடு ஒப்பிட்டு பார்க்கவும் தேசிய வருவாய் பற்றிய புள்ளி விவரம் பயன்படுகிறது.
   5. ஒரு நாட்டின் வளர்ச்சியின் அளவை கணக்கிட தேசிய வருவாய் பயன்படுத்தப்படுகின்றது.

15. கீழ்காணுபவற்றை சுருக்கமாக விவரி?



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

அ) பருவகால வேலையின்மை
ஆ) உடன்பாடில்லா (Frictional) வேலையின்மை
இ) படித்தவர் வேலையின்மை

அ) பருவகால வேலையின்மை

ஒரு வருடத்தின் சில காலங்களில் மட்டும் நிலவும் வேலையின்மைக்கு பருவகால வேலையின்மை என்று பெயர்.

ஆ) உடன்பாடில்லா (Frictional) வேலையின்மை

உழைப்பாளர்களின் தேவை மற்றும் அளிப்பில் சமநிலையற்ற தன்மை நிலவுவதால் தற்கால அல்லது பிறழ்ச்சி வேலையின்மை நிலவுகிறது.


இ) படித்தவர் வேலையின்மை

சில நேரங்களில் படித்து கல்வி தகுதி பெற்றவர்களுக்கு வேலை கிடைப்பது இல்லை அல்லது பகுதி நேர வேலை செய்கின்றனர். இத்தகைய வேலையின்மைக் கற்றோர் (அல்லது) படித்தவர் வேலையின்மை என்று பெயர்.

16. தொன்மை வேலைவாய்ப்பு கோட்பாட்டின்படி கூலிகுறைப்பு எவ்வாறு வேலையின்மைப் பிரச்சினைக்குத் தீர்வாக அமைந்தது என்பதை வரைபடம் மூலம் விளக்குக.

1. கூலி மற்றும் விலையில் நெகிழ்வுத் தன்மை உண்டு
2. உற்பத்திக் காரணிகள் உற்பத்தித் திறனுக்கு ஏற்ப ஊதியம் பெறும்.
3. எனவே கூலி குறைப்பு வேலையின்மைக்கு தீர்வாக அமையும்.

(1)வரைபட விளக்கம்
வரைபடத்தில் கூலி குறையும்போது வேலைவாய்ப்பு அதிகரிக்கிறது.




(2)OW கூலி விகிதத்தில் ON அளவு வேலைவாய்ப்பு உள்ளது.

(3)கூலி OW1 ஆக குறையும் போது வேலை வாய்ப்பானது ON1 அதிகரித்தது. பேரா. பிகு வேலையின்மை பிரச்சனைக்கு இக்கோட்பாட்டை அடிப்படை தீர்வாக எடுத்துக் கொண்டார்.

17. J.B. சே விதியில் விளைவுகளைப் பற்றி குறிப்பு வரைக.


(1) அதிக உற்பத்திக்கோ, வேலையின்மைக்கோ வாய்ப்பில்லை
(2) விலைக் கருவி தானாக இயங்குவதால் அங்கு அரசின் தலையீடு தேவை இருக்காது.
(3) வட்டிவிகித நெகிழ்வுத்தன்மை சேமிப்பதற்கும், முதலீட்டிற்கும் சமநிலையை உண்டாக்கும்.

18.கீன்ஸின் கோட்பாட்டை தொடர் வரைபடம் மூலம் விளக்குக.

Flow Chart



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com




19. தொகு தேவை என்றால் என்ன? அதன் கூறுகளைக் கூறுக.

ஒரு பொருளாதாரத்தின் தொகு தேவைதான் உற்பத்தியை நிர்ணயிக்கிறது. உழைப்பாளர்களை பயன்படுத்தி உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை விற்பதால் எவ்வளவு வருவாய் கிடைக்கும் என்று தொழில் முனைவோர்கள் எதிர்பார்க்கிறார்களோ அதுவே தொகு தேவை எனப்படும். அதன் கூறுகள்.

(1) நுகர்வுத் தேவை
(2) முதலீட்டுத் தேவை
(3) அரசுச் செலவு
(4) நிகர ஏற்றுமதி

$AD=C+I+G+(X-M)$

20. தொகு அளிப்பை வரைபடம் மூலம் விளக்குக.

தொகு அளிப்பு : ஒரு நாட்டில் ஒரு ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்கள் மற்றும் பணிகளின் தொகு மதிப்பே தொகு அளிப்பு ஆகும்.

தொகு அளிப்பின் நான்கு பகுதிகள்:

1. மொத்த நுகர்வுச் செலவு
2. மொத்த தனியார் சேமிப்பு
3. நிகர வரி வசூல்
4. தனிநபர் வெளிநாட்டவர்க்கு கொடுக்கின்ற உதவித்தொகை

மொத்த அளிப்பு $= C+S+T+Rf$

மொத்த அளிப்பு வளைகோடு


1. Z கோடு பணக்கூலி மாறாமல் இருக்கும்போது
2. Z1 பணக்கூலி மாறும்போது
3. N1 க்குபிறகு தொகுப்பளிப்புக் கோடு செங்குத்தாக உள்ளது.

வரைபடம் வேலைவாய்ப்புக்கும் எதிர்பார்க்கும் வருமானத்திற்கும் உள்ள தொடர்பை விளக்குகிறது.



www.Padasalai.Net

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com




21. தொன்மையியத்தையும், கீன்ஸியத்தையும் ஒப்பிடுக. (ஏதேனும் ஐந்து)

| கீன்ஸியம் | தொன்மையியம் |
|---|---|
| 1.குறுகிய காலச் சமநிலை | 1.நீண்ட காலச் சமநிலை |
| 2.சேமிப்பு கெடுதல் | 2.சேமிப்பு நல்லது |
| 3.வட்டிவீதம் மாறிக்கொண்டே உள்ளது (Flow) | 3.வட்டிவீதம் மாறாதது (Stock) |
| 4.தேவையே அதன் அளிப்பை உருவாக்குகிறது | 4.அளிப்பு தன் தேவையை தானே உருவாக்குகிறது. |
| 5.வட்டி என்பது ரொக்க இருப்பை விட்டுக் கொடுப்பதற்கான வெகுமதி | 5.வட்டி என்பது சேமிப்பிற்கான வெகுமதி |


22. கீன்ஸின் நுகர்வு சார்ந்த உளவியல் விதியின் கருத்துக்களைக் கூறுக.


1.நுகர்வோரின் வருமானம் அதிகரிக்கும்போது நுகர்வும் அதகரிக்கும் ஆனால் வருமானம் அதிகரித்த அளவிற்கு நுகர்வு அதிகரிக்காது.

2.வருமானம், நுகர்வுக்கும் சேமிப்புக்கும் இடையே பகிரப்படுகிறது.

23. தன்னிச்சையான முதலீடு மற்றும் தூண்டப்படுகிற முதலீடு ஆகியவற்றை வேறுபடுத்துக.

| தன்னிச்சையான முதலீடு | தூண்டப்படுகிற முதலீடு |
|---|---|
| 1.தன்னிச்சையானது | 1.திட்டமிடப்பட்டது |
| 2.பொருளாதார மந்த காலத்தில் அரசரால் மேறகொள்ளுவது | 2.பொருளாதார வளர்ச்சி காலத்தில் தனியாரால் மேற்கொள்ளுவது |
| 3.சமூக நோக்கமுடையது | 3. இலாப நோக்கமுடையது |
| 4.வருவாய் நெகிழ்ச்சியற்றது | 4.வருவாய் நெகிழ்ச்சி உள்ளது |




24. நுகர்வு சார்பைப் பாதிக்கின்ற ஏதேனும் மூன்று அக மற்றும் புறக்காரணிகளை விளக்குக.

| அகக் காரணிகள் | புறக்காரணிகள் |
|---|---|
| (1)முன்னெச்சரிக்கை நோக்கம் | (1) வருமானப் பகிர்வு |



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

(2)எதிர்பார்க்கும் நோக்கம் (2) விலை அளவு
(3)வாணிப நோக்கம் (3) கூலி அளவு
(4) வட்டி வீதம்

25. முடுக்கிக்கும் பெருக்கிக்கும் உள்ள வேறுபாடுகளை விளக்குக.

| முடுக்கி | பெருக்கி |
|---|---|
| தூண்டப்பெற்ற முதலீடு மாற்றத்திற்கும் மாற்றத்திற்கும் உள்ள விகிதம் | வருமானத்தின் மாற்றத்திற்கும் முதலீட்டில் நுகர்வு ஏற்படும் மாற்றத்திற்கும் உள்ள விகிதம் |
| முடுக்கி (ß)=$\Delta I/\Delta C$ | பெருக்கி (K)=$\Delta Y/\Delta I$ |

26. மிகைப் பெருக்கி விளக்குக.

மிகைப் பெருக்கி எளிய பெருக்கியைவிட சிறந்தது. எளிய பெருக்கி தன்னிச்சை முதலீட்டை மட்டும் உள்ளடக்கி இருக்கும். ஆனால் மிகைப் பெருக்கி தன்னிச்சை முதலீடு மற்றும் தூண்டப்பட்ட முதலீடு ஆகிய இரண்டையும் கொண்டிருக்கும்.

27. பெருக்கி கருத்தின் குறைபாடுகளைக் குறிப்பிடுக.

1. பழைய கடன்களை திருப்பி செலுத்துவதால் MPC குறைந்து பெருக்கியின் மதிப்பு தடைப்படும்.
2. செல்வத்தை வாங்குவதால், அதாவது நிலம், கட்டிடம், நுகர்வுக்குள் வராது. இது பெருக்கியை பாதிக்கும்.
3. பண்டங்களையும், பணிகளையும் இறக்குமதி செய்வதால் நாட்டைவிட்டு பணம் வெளியேறும். இது பெருக்கியை பாதிக்கும்.
4. நுகர்வு பொருட்கள் கிடைக்காமை நுகர்வுச் செலவையும் பெருக்கியின் மதிப்பையும் குறைத்துவிடும்.
5. முழு வேலைவாய்ப்பு நிலை பணவீக்கம் ஏற்பட்டு வருமானத்தை பாதிக்கும்.

28. உலோகப் பணம் பற்றி ஓர் குறிப்பு வரைக.

1. பண்டமாற்று முறை, பண்டப்பணமுறைக்குப் பின் உலோக பணமுறை பின்பற்றப்பட்டது.
2. உலோக திட்டத்தின் கீழ் தங்கம், வெள்ளி போன்ற உலோக நாணயம் உருவாக்கப்பட்டது.
3. அந்த நாணய முகமதிப்பு மற்றும் உள்ளடக்க மதிப்பு இரண்டும் சமம்.

29. பண அளிப்பு என்றால் என்ன?

1. ஒரு குறிப்பிட்ட நேரத்தில் நாட்டின் பணப்புழக்க அளவே பண அளிப்பு.
2. வட்டி வீதம், விலைவாசி பண அளிப்பு நிர்ணயிப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறது.
3. குறிப்பிட்ட காலத்தில் பண அளிப்பு நிலைக் கருத்தாகவும் (Stock), கால இடைவெளியில் ஓட்டக் கருத்தாகவும் உள்ளது. (Flow)
4. RBI பண அளிப்பை M1, M2, M3 மற்றும் M4 என அளவிடுகிறது.

30. பண அளிப்பினை தீர்மானிக்கும் காரணிகள் யாவை?

1.ரொக்க வைப்பு விகிதம் (CDR)
2.ரொக்க இருப்பு வைப்பு விகிதம் (RDR)
3.ரொக்க இருப்பு விகிதம் (CRR)
4.சட்டப்பூர்வ நீர்மை விகிதம் (SLR)

31. பணவீக்கத்தின் வகைகள் பற்றி எழுதுக.

அ) (1) தவழும் பணவீக்கம் (2) நடக்கும் பணவீக்கம்



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

(3) ஓடும் பணவீக்கம் (4) தாவும் பணவீக்கம்
ஆ) (1) தேவை இழுப்பு பணவீக்கம் (2) செலவு உந்து பணவீக்கம்
(3) கூலி விலை சூழல்
இ) (1) காகித பணவீக்கம் (2) கடன் பணவீக்கம்
(3) பற்றாக்குறை பணவீக்கம் (4) இலாப தூண்டல் பணவீக்கம்

32. தேவை இழுப்பு மற்றும் செலவு உந்து பணவீக்கத்தினை விளக்குக.
(1) தேவை இழுப்பு பணவீக்கம்: பொருட்களுக்கான அளிப்பு நிலையாக இருந்து, தேவை அதிகரித்தால் விலைவாசி உயரும்.
(2) செலவு உந்து பணவீக்கம்: உற்பத்தியில் மூலப்பொருள் செலவு உயரும் பொழுது பொருட்களுக்கான விலை அதிகரிக்கின்றது.

33. பண மதிப்பு பற்றிய கேம்பிரிட்ஜ் சமன்பாடுகளை விளக்குக.
(1)மார்சல் பயன்பாடு:

M=KPY
M=பணத்தின் அளவு
Y=சமுதாய உண்மை வருமானம்
P=பொது விலைமட்டம்
K=ரொக்கமாக வைத்திருக்க விரும்பும் உண்மை வருமான பகுதி

(2)கீன்ஸ் சமன்பாடு
N=PK (or) P=N/K
N=மொத்த பண அளிப்பு
P=நுகர்வு பொருளின் விலை மட்டம்
K=கையில் வைத்திருக்க விரும்பும் வருமான ஒரு பகுதி. நுகர்வு பொருள் விலை

34. மீள் பணவீக்கம் பற்றி விளக்குக.
வேலைவாய்ப்பினை பாதிக்காத வகையில் கடன்களை கட்டுப்படுத்துவதன் மூலம் பணவீக்கம் குறைப்பது மீள் பணவீக்கம் (அல்லது)
வேலைவாய்ப்பின்மையை ஏற்படுத்தாமலும் உற்பத்தி அளவு குறையாமலும் பணவீக்கத்தை திருப்பும் செயல்முறையே - மீள் பணவீக்கம்

35. வணிக வங்கிகளின் கடன் உருவாக்க முறை நுட்பத்தினை விவரி?
வங்கிகள் வழங்கும் கடன் பொருளாதாரத்தில் பண அளிப்பினை அதிகப்படுத்தும் ஒருவருக்கு வழங்கப்படும். கடன் ரொக்கமாக கையில் கொடுக்கப்படாமல் அவர் கணக்கில் செலுத்தப்படும்.
1. முதல் நிலை வைப்பு 2. பெறப்பட்ட வைப்பு
வணிக வங்கி உதாரணத்திற்கு 20% ரொக்க இருப்பு வைத்து மீதமுள்ள பணம் கடனாக வழங்கும். முதல் வைப்பு 1000 எனில் அதில் 800 ஐ வங்கியில் கடன் கொடுக்க தயார் நிலையில் இருக்கும். 800 கடன் எனில் அதில் 640 ம் 640 கடன் எனில் அதில் 512 ம் கடன் வழங்க தயார் நிலையில் இருக்கும். இவ்வாறு ரூ.1000 வைப்பு ரூ.5000 மாசு பெருகும்.

36. வங்கியல்லா நிதியமைப்புகளைப் பற்றி சிறு குறிப்பு தருக.
1.முழு வங்கிக்கான உரிமம் கொண்டதல்ல, மைய வங்கியால் கண்காணிக்கப்படுவது இல்லை.
2.முழுமையான வங்கிப்பணி செய்யாமல் வைப்புகளை பெற்று கடன் வழங்குகிறது.
3.பண அங்காடி மூலதன அங்காடியில் செயல்படுகின்றது.
4.(உம்) நிதி நிறுவனம், நிதிக்கழகம், சீட்டு நிறுவனங்கள், யூனிட் டிரஸ்ட், காப்பீட்டு நிறுவனங்கள்.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

37. கடன் கட்டுப்பாட்டு முறைகளை கூறுக.

கடன் கட்டுப்பாட்டு முறைகள்

| கடன் அளவுக் கட்டுப்பாட்டு முறைகள் | கடன் தன்மைக் கட்டுப்பாட்டு முறைகள் |
|---|---|
| 1.வங்கி விகிதக் கொள்கை | 1.கடன் பங்கீடு |
| 2.வெளிச்சந்தை நடவடிக்கைகள் | 2.நேரடி நடவடிக்கைகள் |
| 3.மாறும் ரொக்க இருப்பு விகிதம் | 3.நெறிமுறை தூண்டுதல் |
| | 4.விளம்பரப்படுத்துதல் |
| | 5. நுகர்வோர் கடன் நெறிபடுத்துதல் |
| | 6. விளிம்பு நிலை தொகை மாற்றுதல் |

38. நபார்டின் பணிகள் யாவை?

(1)விவசாயம், சிறுதொழில், குடிசை மற்றும் கிராம தொழிலாளர்களுக்கு மறுகடன் வழங்குகிறது.

(2)மாநில கூட்டுறவு வங்கி, வட்டார ஊரக வங்கி, நிலவள வங்கிகளுக்கு குறுகிய, மத்திய நீண்ட கால கடன் வழங்குகிறது.

(3)மாநில அரசுக்கு 20 ஆண்டு நீண்ட கால கடன் வழங்குகிறது.

(4)மைய அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனததிற்கு நீண்ட கால கடன் வழங்குகிறது.

(5)கூட்டுறவு வங்கிகளை ஆய்வு செய்யும் பணியினை செய்கிறது.

(6)வேளாண், ஊரக வளர்ச்சி ஆய்வுகளை மேம்படுத்துகிறது.

39. இந்திய தொழில் நிதிக் கழகத்தின் பணிகள் யாவை?

(1)இந்திய ரூபாய் மற்றும் வெளிநாட்டு பணத்தில் நீண்ட கால கடன் வழங்குகிறது.

(2)சம உரிமை பங்குகள், முன்னுரிமைப் பங்குகள், கடன் பத்திரம் வாங்கவும், ஒப்புறுதியளிக்கவும் செய்கிறது.

(3)இறக்குமதி, ஏற்றுமதி பணத்திற்கு உத்திரவாதம் அளிக்கிறது.

(4)வெளிநாட்டு நிறுவனத்திடமிருந்து (அந்நாட்டு பணம்) பெறப்படும் கடனுக்கு உத்திரவாதம் அளிக்கிறது.

40. பணச்சந்தையையும், மூலதனச் சந்தையையும் வேறுபடுத்துக.

| பணச்சந்தை | மூலதனச் சந்தை |
|---|---|
| 1.அதிக நீர்மை தன்மை கொண்ட நிதிக்கருவி கையாளுகிறது. | 1.குறைந்த நீர்மை தன்மை கொண்ட நிதிக்கருவி கையாளுகிறது. |
| 2.குறுகிய கால முதிர்ச்சி உடைய கடன் கருவி | 2.நீண்ட கால முதிர்ச்சி உடைய கடன் கருவி |
| 3.(உதா. அரசுப்பத்திரம், வணிகப் பத்திரம், அழைப்பு பணம், மாற்றுச்சீட்டுகள் | 3.(உதா) கடன் பத்திரங்கள் சம பங்குகள் ஆகும். அந்நிய செலாவணி |

41. பண மதிப்பு நீக்கத்தின் நோக்கங்களை கூறுக.

1. கருப்புப் பணத்தினை ஒழிப்பது
2. இலஞ்சத்தை தடுப்பது
3. தீவிரவாதத்திற்கு பணம் செல்வதை தடுப்பது
4. கள்ளப்பணத்தினை தடுப்பது

42. பொருளாதாரத்திற்கும், சுற்றுச்சூழலுக்கும் உள்ள தொடர்பினை சுருக்கமாகக் கூறுக.

1. இயற்கை வளங்களை உயர்திறனுடன் பங்கீடு செய்வது தொடர்பான பொருளியலின் ஒரு பகுதி சுற்றுசூழல் பொருளியல்



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

2. பொருளாதார நடவடிக்கைகளுக்கான நேரடி மதிப்பினையும், இடுபொருட்களையும் சுற்றுச்சூழல் வழங்குவதால் அவைகள் ஒன்றுக்கொன்று தொடர்புடையவை.
3. மனிதன் தனது வாழ்வாதாரத்திற்காக இயற்கையோடு இணைந்துள்ளதால் அவனது வாழ்க்கை முறையே சுற்றுச்சூழல் தீர்மானிப்பதால் பொருளாதாரம், சுற்றுச்சூழலும் ஒன்றுக்கொன்று தொடர்புடையவை.

43. பொருள்சார் சமநிலை அணுகுமுறையின் பொருள் குறிப்பிடுக.

1. பொருளாதாரத்திற்கும், சுற்றுச்சூழலுக்கும் இடையேயான தொடர்பினை விளக்க ஆலன் நீஸ் மற்றும் R.V. அய்யர்ஸ் "பொருள்சார் சமநிலை அணுகுமுறை" வகுத்தளித்துள்ளார்.

2. பொருள்சார் சமநிலை அணுகுமுறை மாதிரியில் மொத்த பொருளியல் செயல்பாடுகள் உள்ளீடு, வெளியீடு ஆகியவற்றுக்கிடையே சமமான ஓட்டமாக உள்ளது.

44. பல்வகையான காற்று மாசுகளை விளக்குக.

1. உட்புற காற்று மாசு :
   மனிதர்களின் வசிப்பிடத்திற்குள் தீங்கு விளைவிக்கக்கூடிய அசுத்தங்கள் காற்றில் கலந்திருப்பது. (உ.ம்) சமையலின்போது மாசுபடுதல்
2. வெளிப்புற காற்று மாசு :
   காற்று மண்டலத்தில் திட, திரவ அல்லது வாயு வடிவ அசுத்தங்கள் கலந்திருப்பது. (உம்) தொழிற்சாலைகளால் காற்று மாசுபடுதல்.

45. நீர்மாசுக்கான காரணங்கள் யாவை?

1. கழிவுநீர் மற்றும் தேவையற்ற நீர் வெளியேற்றம்
2. எண்ணெய் சிந்துதல்
3. அமில மழை
4. புவி வெப்பமடைதல்
5. திட கழிவுகள்
6. ஆலைக் கழிவுகளைக் கொட்டுதல்

46. இ-கழிவுகள் என்பதன்பொருள் தருக.

தொலை சாதனம், கணிணிகள், கேட்கும் கருவிகள், தொலைபேசி, VCR, DVD, தொலை நகல், நகலெடுக்கும் இயந்திரங்கள், கம்பியில்லாக் கருவிகள் போன்ற வீட்டு உபயோகப் பொருட்களை கழிக்கும் போதோ (அல்லது) மறுசுழற்சி செய்யும் போதோ தோன்றுபவை இ-கழிவுகள் என்று சொல்லப்படும் மின்னணுக்கழிவுகள்.

47. நில மாசு என்றால் என்ன? அதற்கான காரணங்களைக் குறிப்பிடுக.

நில மாசு ___ விளக்கம்

சுற்றுச்சூழல் கொட்டப்படும் திட, திரவு, வாயுப்பொருட்கள் நிலத்தின் தன்மையைக் கெடுத்து விடுதல் நிலமாசு ஆகும்.

காரணங்கள்:

1.காடுகளை அழித்தல்
2.விவசாய நடவடிக்கைகள்
3.குப்பை மற்றும் கழிவுகளை மண்ணில் புதைத்தல்
4.அணுமின் விரயங்கள்



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

48. குறிப்பு வரைக.

அ. பருவநிலை மாற்றம்:

வெப்பநிலை, மழைப்பொழிவு, காற்று வீசுதல் ஆகியவற்றின் அளவுகளிலும் அவைகள் நிலவும் காலங்களிலும் ஏற்படும் மாற்றம் பருவநிலை மாற்றம் ஆகும்.

ஆ. அமில மழை:

சல்பர்-டை-ஆக்ஸைடு, நைட்ரஜன் ஆக்ஸைடு வளிமண்டலத்தில் நீருடன் வினை புரிந்து பூமிக்கு மழை மற்றும் பனிப்பொழிவாக பூமிக்கு திரும்புவதைக் குறிப்பது.

www.Padasalai.Net

## ஐந்து மதிப்பெண் வினா விடை

1. பேரினப் பொருளியலின் பரப்பெல்லையை விவரி.
   1. தேசிய வருவாய்: தேசிய வருவாயை கணக்கிடுதல் மற்றும் தேசிய வருவாயில் துறைகளின் பங்கு போன்றவை பேரியல் பொருளாதார பகுத்தாய்வின் அடிப்படை அம்சங்கள் ஆகும்
   2. பணவீக்கம்: பணவீக்கம் என்பது பொதுவான விளை அளவு தொடர்ந்து அதிகரிப்பதை குறிக்கும்.
   3. வாணிப சுழற்சி: மொத்த பொருளாதார காரணிகளை அடிப்படையாகக் கொண்டு ஒரு நாட்டின் வாணிப சுழற்சி மாற்றங்களை தெரிந்து கொள்ள முடிகின்றது.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

4. வறுமை மற்றும் வேலையின்மை: வளங்கள் நிறைந்த நாடுகளிலும் வறுமை மற்றும் வேலையின்மை மிகப்பெரிய பிரச்சினையாக உள்ளது. இப்பிரச்சினைக்கு தீர்வு காண வளங்களை ஒதுக்கீடு செய்யவும், சரியான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் பேரியல் பொருளியல் உதவுகிறது.
5. பொருளாதார வளர்ச்சி: பேரியல் பகுத்தாய்வின் மூலம்தாக் ஒரு பொருளாதார அமைப்பின் வளர்ச்சி மற்றும் முன்னேற்றம், அதை தீர்மானிக்கும் காரணிகள் போன்றவற்றை புரிந்து கொள்ள முடியும்.

2. நடவடிக்கைகள் அடிப்படையில் ஒரு பொருளாதார அமைப்பு செயல்படுவதை விவரி.
   1. ஒரு பொருளாதார அமைப்பு என்பது பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்ளும் முறையைக் குறிப்பதாகும்.
   2. ஒரு பொருளாதார அமைப்பின் அடிப்படை நடவடிக்கைகள் உற்பத்தி மற்றும நுகர்வு ஆகும்.
   3. முக்கிய பொருளாதார நடவடிக்கைகள்:
   போக்குவரத்து, வங்கிப்பணி, விளம்பரம், திட்டமிடல், அரசின் கொள்ளை மற்றும் பிற பணிகள்.
   4. முக்கிய பொருளாதார மற்ற நடவடிக்கைகள்:
   சுற்றுச்சூழல், ஆரோக்கியம், கல்வி, பொழுதுபோக்கு, ஆட்சிமுறை, நெறிப்படுத்துதல் போன்றவை.
   5. பொருளாதாரத்தின் வெளி நடவடிக்கைகளான இறக்குமதி, ஏற்றுமதி, பன்னாட்டு உறவுகள், குடியேற்றம், இடப்பெயர்ச்சி, பன்னாட்டு முதலீடு.

3. முதலாளித்துவம் மற்றும் சமத்துவம் ஆகியவற்றின் இயல்புகளை ஒப்பிடுக.

| வ. எண் | தன்மைகள் | முதலாளித்துவம் | சமத்துவம் |
|---|---|---|---|
| 1. | உற்பத்தி மூலங்களின் உரிமை | தனியார் உரிமை | பொது (அரசு) உரிமை |
| 2. | பொருளாதார நோக்கம் | இலாபம் | சமூக நலன் |
| 3. | மைய பிரச்சினைகளின் தீர்வு | தடையில்லா சந்தை முறை | மத்திய திட்டமுறை |
| 4. | அரசின் பங்கு | உள்ளீடு கட்டுப்பாடு மட்டும் | முழு ஈடுபாடு |
| 5. | வருவாய் பங்கீடு | சமனற்ற நிலை | சமநிலை |
| 6. | நிறுவன தன்மை | தனியார் நிறுவனம் | அரசு நிறுவனம் |
| 7. | பொருளாதார சுதந்திரம் | முழுமையான சுதந்திரம் | சுதந்திரமின்மை |
| 8. | முக்கிய பிரச்சினை | சமமின்மை | திறனின்மை |

4. முதலாளித்துவம், சமத்துவம் மற்றும் கலப்புத்துவம் ஆகியவற்றின் இயல்புகளை ஒப்பிடுக.

| வ. எண் | தன்மைகள் | முதலாளித்துவம் | சமத்துவம் | கலப்புத்துவம் |
|---|---|---|---|---|
| 1. | உற்பத்தி மூலங்களின் உரிமை | தனியார் உரிமை | பொது (அரசு) உரிமை | தனியார் மற்றும் பொது உரிமை |
| 2. | பொருளாதார நோக்கம் | இலாபம் | சமூக நலன் | சமூக நலன் மற்றும் இலாப நோக்கம் |
| 3. | மைய பிரச்சினைகளின் தீர்வு | தடையில்லா சந்தை முறை | மத்திய திட்டமுறை | மத்திய திட்டமுறை மற்றும் தலையில்லா சந்தை |
| 4. | அரசின் பங்கு | உள்ளீடு கட்டுப்பாடு மட்டும் | முழு ஈடுபாடு | குறைந்த பங்கு |
| 5. | வருவாய் பங்கீடு | சமனற்ற நிலை | சமநிலை | குறைந்த சமநிலையற்ற நிலை |



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

| | | | | |
|---|---|---|---|---|
| 6. | நிறுவன தன்மை | தனியார் நிறுவனம் | அரசு நிறுவனம் | தனியார் மற்றும் அரசு நிறுவனங்கள் |
| 7. | பொருளாதார சுதந்திரம் | முழுமையான சுதந்திரம் | சுதந்திரமின்மை | கட்டுப்பாட்டுடன் சுதந்திரம் |
| 8. | முக்கிய பிரச்சினை | சமமின்மை | திறனின்மை | சுமமின்மை மற்றும் திறனின்மை |

5. தேசிய வருவாயின் முக்கியத்துவத்தை விவரி.

ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் தேசிய வருவாய் மிக முக்கிய பங்கு வகிக்கிறது. தேசிய வருவாய் பொருளாதாரத்தின் கணக்கு அல்லது சமூக கணக்கு எனச் சொல்லப்படுகிறது.

தேசிய வருவாய் பகுத்தாய்வின் முக்கியத்துவம் பின்வருமாறு:

1. தேசிய வருவாய் கணக்கீட்டின் மூலம் பொருளாதாரத்தில் இருக்கும் பல்வேறு துறைகளின் முக்கியத்துவம் பற்றியும் தேசிய வருமானத்தில் அத்துறையின் பங்களிப்பு பற்றியும் அறிய முடிகின்றது.
2. தேசிய அளவிலான பணவியல் அல்லது பொது நிதிக் கொள்கைகளை உருவாக்க உதவுகிறது.
3. திட்டமிடுதலுக்கும், திட்டங்களின் விளைவுகளை மதிப்பிடுவதற்கும் நாட்டின் மொத்த வருமானம், உற்பத்தி, சேமிப்பு மற்றும் நுகர்ச்சியின் அளவு ஆகிய புள்ளி விவரங்களை தேசிய வருவாய் கணக்கீடு அளிக்கின்றது.
4. குறுகிய கால மற்றும் நீண்ட கால பொருளாதார மாதிரிகளை உருவாக்க தேசிய வருவாய் கணக்கீடு பயன்படுகிறது.
5. ஒரு நாட்டின் வருமானத்தை மற்ற நாடுகளின் வருமானத்தோடு ஒப்பிடவும் தேசிய வருவாய் விவரங்கள் பயன்படுகின்றன.

6. தேசிய வருவாயைக் கணக்கிடும் முறைகளை விளக்குக.

தேசிய வருவாயை மூன்று முறைகளை பயன்படுத்தி அளவிடலாம். ஆவை: உற்பத்தி முறை, வருவாய் முறை மற்றும் செலவு முறை.

இம்மூன்று முறைகளை சரியாக பயன்படுத்தி கணக்கிட்டால் உற்பத்தி, வருமானம், செலவு இம்மூன்றின் மதிப்பும் சமமாக இருக்கும்.

உற்பத்தி = வருமானம் = செலவு

ஏனென்றால், இம்மூன்று முறைகளும் இயல்பாகவே ஒரு சுழற்சியாக இருக்கும்.

1. உற்பத்தி முறை:

உற்பத்தி முறை என்பது ஒரு நாட்டின் உற்பத்தியை கணக்கிடுவது ஆகும். இம்முறை சரக்கு முறை என்றும் அழைக்கப்படுகின்றது. ஒரு குறிப்பிட்ட ஆண்டில் விவசாயம், தொழில், வணிகம் போன்ற துறைகளின் உற்பத்தி மொத்தமே தேசிய உற்பத்தி ஆகும்.

2. வருமான முறை:

வருமான முறை என்பது தேசிய வருவாய் கணக்கிடல் பகிர்வு பகுதியிலிருந்து அணுகப்படுகிறது. உற்பத்தி நிலைகளில் உற்பத்தி காரணிகள் பெற்ற அனைத்துவித ஊதியங்களையும் கூட்டி தேசிய வருமானத்தைக் கணக்கிடலாடம். வருமான முறை காரணிகள் சம்பாதிக்கும் முறை என்றும் அழைக்கப்படுகிறது.

3. செலவு முறை:

செலவு முறையில் ஓர் ஆண்டில் சமுதாயத்தில் உள்ளவர்களால் மேற்கோள்ளப்படும் மொத்த செலவுகள் அனைத்தையும் கூட்டி தேசிய வருவாய் கணக்கிடப்படுகிறது.

மொத்த செலவு (கீழ்க்கண்ட சமன்பாட்டின் மூலம் கணக்கிடப்படுகிறது.

$$GNP=C+I+G+(X-M)$$



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

C-தனியார் நுகர்வுச் செலவு G- அரசின் கொள்முதல் செலவு
I- தனியார் முதலீட்டுச் செலவு (X-M) – நிகர ஏற்றுமதி

7. தேசிய வருவாய் கணக்கீட்டில் உள்ள சிரமங்கள் யாவை? (மெல்ல கற்கும் மாணவர்கள் 7 தலைப்பு மட்டும் எழுதவும்)
   1. மாற்று செலுத்துதல்களை வருவாயில் சேர்ப்பதில்லை
      ஓய்வூதியம், வேலையின்மைக்கான உதவித் தொகை மானியங்கள் போன்றவற்றை அரசு அளிக்கிறது. இவைகள் அரசின் செலவுகள் ஆகும். ஆனால் இவைகளை தேசிய வருவாயில் சேர்ப்பதில்லை.
   2. தேய்மானங்கள் கொடுப்பளவு மதிப்பிடுவதில் சிக்கல்:
      தேய்மானம் கொடுப்பளவு, விபத்து இழப்பீடு மற்றும் பழுது கட்டணங்கள் போன்றவற்றை தேசிய வருவாயிலிருந்து கழிப்பது என்பது மிக எளிதானது அல்ல.
   3. பணம் செலுத்தப்படாத சேவைகள்:
      இந்தியாவில் அதிகமான பெண்கள் வீட்டிலேயே அதிக வேலை செய்கின்றனர். உணவு தயாரித்தல், தையல், பழுதுபார்த்தல், துவைத்தல், சுத்தம் செய்தல், குழந்தைகளை வளர்த்தல் போன்ற வேலைகளையும் எந்தவித பண வருமானமும் இன்றியும் நட்பு, பாசம், அன்பு, மரியாதை போன்ற பணத்தால் மதிப்பிட முடியாத காரணங்களுக்காகவும் வேலை செய்கிறார்கள்.
   4. சட்ட விரோத நடவடிக்கையிலிருந்து பெறும் வருமானம் சேர்க்கப்படுவதில்லை.
      சூதாட்டம், கடத்தல் மற்றும் சட்ட விரோதமாக மதுவை தயாரித்தல் போன்ற நடவடிக்கைள் மூலம் பெறப்படும் வருமானம் தேசிய வருமானத்தில் சேர்க்கப்படுவது இல்லை.
   5. சுய நுகர்வுக்கு உற்பத்தி செய்தல் மற்றும் விலை மாற்றம் கண்டறிவதில் சிக்கல்
      விவசாயிகள் தங்களின் சுய நுகர்விற்காக உற்பத்தியில் ஒரு பகுதியை ஒதுக்கி வைக்கின்றனர். சந்தையில் விற்பனை செய்யாமல் ஒதுக்கிய உற்பத்தி தேசிய வருமானத்தில் சேர்க்கப்பட்டதா என்பதை கண்டறிவதில் சிக்கல் ஏற்படுகிறது.
   6. இருமுறை கணக்கீட்டுப் பிரச்சனை
   7. மூலதன இலாபம் சேர்க்கப்படுவதில்லை.

8. பொருளாதார ஆய்வில், சமூக கணக்கிடுதலின் அவசியத்தை விவரி.
   1. சமூகக் கணக்கிடுதல் மூலமாகவும், தேசிய வருவாய் கணக்கிடப்படுகிறது.
   2. சமூகக் கணக்கிடுதல் முறையில் நிறுவனங்கள், குடும்பங்கள், அரசு வெளிநாட்டு வாணிபம் மற்றும் மூலதனத் துறை ஆகிய துறையின் பரிமாற்றங்கள் பதியப்பட்டு இவற்றிற்கு இடையே உள்ள தொடர்புகளும் கண்டறியப்படுகின்றன.
   3. சமூகக் கணக்கிடுதலை தயாரிப்பது பொருளியல் அறிஞர்களுக்கு கொள்கைகளை உருவாக்க பயன் உள்ளதாக இருக்கும்.
   4. சமூகக் கணக்கிடுதல் பொருளாதார அமைப்பின் பல்வேறு துறைகளிடையே உள்ள புள்ளியியல் மற்றும் பொருளாதார காரணிகளின் தொடர்புகளை விளக்குகிறது.

9. வேலையின்மையின் வகைகளை விவரி? (மெல்ல கற்கும் மாணவர்களுக்கு ஏதேனும் 5 மட்டும்)
   (1) வாணிபச்சூழல் வேலையின்மை:
   கீழ் நோக்கிய பகுதியில் ஒரு பொருளாதாரம் இருக்கும்போது நிகழ்கின்ற வேலையின்மைக்கு சூழல் வேலையின்மை என்று பெயர்.
   (2) பருவகால வேலையின்மை:
   ஒரு வருடத்தில் சில காலங்களில் மட்டுமே நிலவும் வேலையின்மைக்கு பருவகால வேலையின்மை என்று பெயர்.
   (3) தற்காலிக அல்லது உடன்பாடில்லா வேலையின்மை:
   உழைப்பாளர்களின் தேவை மற்றும் அளிப்பில் சமநிலையற்ற தன்மை நிலவுவதற்கு தற்காலிக அல்லது பிறழ்ச்சி வேலையின்மை என்று பெயர்.
   (4) கற்றோர் வேலையின்மை :



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

சில நேரங்களில் படித்து கல்வி தகுதி பெற்றவர்களுக்கு வேலை கிடைப்பது இல்லை அல்லது பகுதிநேர வேலை செய்கின்றனர். இதற்கு கற்றோர் வேலையின்மை என்று பெயர்.

(5) தொழில்நுட்ப வேலையின்மை:
புதிய தொழில்நுட்பம் மூலதன செறிவு உடையதாக இருப்பதால் குறைந்த எண்ணிக்கையில் உழைப்பாளர்கள் தேவைப்படுகின்றனர்.

(6) அமைப்புசார் வேலையின்மை:
சமூக அமைப்புகளில் ஏற்படும் பெரிய மாற்றங்களால் அமைப்புசார் வேலையின்மை உருவாகிறது.


(7) மறைமுக வேலையின்மை:
தேவைக்கு அதிகமானவர்கள் ஒரு வேலையில் இருந்தால் அது மறைமுக வேலையின்மை என்று பெயர்.

10. சே-யின் அங்காடி விதியினை திறனாய்வு செய்க.

(1) கீன்ஸின் கருத்துப்படி அளிப்பு அதற்கான தேவையை உருவாக்காது.
(2) பொருளாதாரத்தில் தானாக சரிசெய்து கொள்ளும் அமைப்பு வேலையின்மையை குறைக்காது.
(3) அளவுக்கு அதிகமான உற்பத்திக்கு வாய்ப்பு உள்ளது.
(4) முதலாளித்துவ நாடுகளில் குறைவான வேலை உள்ளதால் முழு வேலை வாய்ப்புக்கு சாத்தியமில்லை.
(5) பணம் நடுநிலையாக இருக்காது.
(6) அரசின் தலையீடு அவசியம்.

11. ADF மற்றும் ASF இடையிலான சமநிலையை வரைபடம் மூலம் விவரி.

1. கீன்ஸின் வேலைவாய்ப்பு கோட்பாட்டில் ADF மற்றும் ASF சமநிலையை விளக்க குடும்பங்கள் மற்றும் வியாபாரம் ஆகிய இரு துறைகள் எடுத்துக்கொள்ளப்படுகிறது.
2. நுகர்வு செலவு தொடர்பான முடிவுகளை குடும்பங்களும், முதலீடு தொடர்பான முடிவுகளை வியாபார நிறுவனங்களும் எடுக்கின்றன.




வரைபடம் விளக்கம்

1. தொகுத்தேவை மற்றும் தொகு அளிப்பு 'E' புள்ளியில் சமநிலை அடைகிறது. இப்புள்ளியில் வேலைவாய்ப்பு $N_o$ இருக்கும்.

2. கீன்ஸின் வேலைவாய்ப்பு கோட்பாட்டின் மைய கருத்து என்னவெனில், சமநிலை வேலைவாய்ப்பு என்பது ஒரு நாட்டின் பொருளாதாரம் முழுவேலை நிலையில் இருக்க வேண்டும் என்பதில்லை. வரைபடத்தில் $N_o$ மற்றும் $N_1$ க்கும் இடையே உள்ள வித்தியாசம் வேலையின்மையை காட்டுகிறது.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

12. தொன்மைக் கோட்பாடு மற்றும் கீன்ஸ் கோட்பாடு ஆகியவற்றிற்கு இடையிலான வேறுபாடுகளை விளக்குக (மெல்ல கற்கும் மாணவர்களுக்கு ஏதேனும் 5 மட்டும்)

| கீன்ஸ் கோட்பாடு | தொன்மைக் கோட்பாடு |
|---|---|
| 1.குறுகிய காலச் சமநிலை | 1.நீண்ட காலச் சமநிலை |
| 2.பணம் பரிவர்த்தனைக்கும் சேமிக்கவும் உதவும் | 2.பணம் பரிவர்த்தனைக்கு மட்டும் உதவும். |
| 3.அரசின் தலையீடு அதிகம் | 3.அரசின் தலையீடு குறைவு |
| 4.குறை முழு வேலைவாய்ப்பு நிலவும் | 4.முழு வேலைவாய்ப்பு நிலவும் |
| 5.பற்றாக்குறை வரவு-செலவு அறிக்கை சிறந்தது. | 5.உபரி வரவு-செலவு அறிக்கை சிறந்தது. |
| 6.வட்டி வீதம் மாறும் | 6.வட்டி வீதம் மாறாது |
| 7.தேவையே அதன் அளிப்பை உருவாக்குகிறது. | 7.அளிப்பு அதன் தேவையை உருவாக்குகிறது. |
| 8.பொருளாதார பிரச்சினைகளுக்கு பேரியல் அணுகுமுறை | 8.பொருளாதார பிரச்சினைகளுக்கு நுண்ணின அணுகுமுறை |
| 9.சேமிப்பு கெடுதல் | 9.சேமிப்பு நல்லது |

13. கீன்ஸின் நுகர்வுச் சார்பின் உளவியல் விதியினை வரைபடம் மூலம் விளக்குக.

1. விளக்கம்:

நுகர்வோரின் வருமானம் அதிகரிக்கும்போது நுகர்வும் அதிகரிக்கும் வருமானம் உயர்ந்த அளவிற்கு நுகர்வு அதிகாரிக்காது.

2.அனுமானம்:


1.மற்றவை மாறாது 2.அசாதாரணம் சூழல் இல்லை 3.தடையில்லா கொள்கை

3.கருத்துக்கள்:

அ)வருமானம் உயரும்போது நுகர்வு உயரும்.

ஆ)வருமானம் நுகர்வுக்கும் சேமிப்புக்கும் இடையே பகிரப்படுகிறது.

இ)வருமானம் உயரும்போது சேமிப்பு, நுகர்வு இரண்டும் அதிகரிக்கும்.




4.வரைபட விளக்கம்:

வரைபடத்தில் வருமானம் 120 லிருந்து 180 ஆக அதிகரிக்கும்போது நுகர்வு 120 லிருந்து 170 ஆக அதிகரிக்கின்றது. ஆனால் அதிகரித்த நுகர்வு அதிகரித்த வருமானத்தை காட்டிலும் 10 குறைவு. அது சேமிக்கப்படுகிறது.

வருமானம் 180 லிருந்து 240 ஆக அதிகரிக்கும் போது நுகர்வு 170 லிருந்து 220 ஆகவும் சேமிப்பு 10 லிருந்து 20 ஆகவும் அதிகரிக்கிறது.

14. நுகர்வு சார்பின் அக மற்றும் புறக்காரணிகளை விளக்குக. (மெல்ல கற்கும் மாணவர்களுக்கு இரண்டிலும் ஏதேனும் மூன்று எழுதவும்.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

அகக்காரணிகள்:

(1) முன்னெச்சரிக்கை நோக்கம்: எதிர்பாராமல் ஏற்படும் செலவுகளை சந்திப்பதற்காக கையில் ரொக்கமாக வைத்திருப்பது.
(2) எதிர்பார்க்கும் நோக்கம்: எதிர்கால தேவைக்கான விருப்பம்.
(3) கணிக்கும் நோக்கம்: மற்றவரின் விருப்பம் மற்றும் பாராட்டை பெறுதல்.
(4) முன்னேறும் நோக்கம்: வாழ்க்கைத் தரத்தை முன்னேற்ற விரும்புதல்
(5) வாணிப நோக்கம்: வியாபாரத்தை வளரச் செய்ய விரும்புதல்.


புறக் காரணிகள்

(1) வருமானப் பகிர்வு: ஏழைகளுக்கு வருமானம் அதிகரித்தால் நுகர்வு அதிகரிக்கும்.
(2) விலை அளவு: நாட்டில் விலைவாசி குறைந்தால் நுகர்வு அதிகரிக்கும்.
(3) கூலி அளவு: கூலி உயர்ந்தால் நுகர்வு அதிகரிக்கும்.
(4) வட்டி விகிதம்: வங்கிகள் சேமிப்பதற்கான வட்டிவீதத்தை குறைத்தால் நுகர்வு அதிகரிக்கும்.
(5) நிதிக் கொள்கை: அரசு வரிவிதிப்பை குறைக்கும் போது நுகர்வு அதிகரிக்கும்
(6) நுகர்வுக் கடன்: கடன் வசதி நுகர்வை அதிகரிக்கும்.

15. பெருக்கி இயங்கும் விதத்தினை விவரி

அரசு 100 கோடி பொதுப்பணிக்காக கூலி, இதர பொருட்கள் வாங்குவதற்காக செலவிடுகிறது எனக் கொள்வோம். இந்த 100 கோடி உழைப்பாளர்களுக்கும், பொருட்களை அளித்தவர்களுக்கும் வருமானமாக அமையும். இங்கு இறுதிநிலை நுகர்வு நாட்டம் 0.8 (80%) எனக் கொண்டால் 80 கோடியை நுகர்வுச் செலவுக்கும், மீதம் 20 கோடியை சேமிக்கவும் செய்வர். இதில் மேற்கண்ட வருமானம் பெற்றவர்களின் இறுதிநிலை நுகர்வு நாட்டம் 0.8 எனில் 80 கோடியில் 64 கோடி நுகர்வுச் செலவுக்கும் மீதம் 16 கோடியை சேமிக்கவும் செய்வர். இந்த வழியில் நுகர்வுச் செலவானது ஒரு சங்கிலித் தொடர் போன்று சென்று கொண்டே செல

16. முடுக்கி இயங்கும் விதத்தினை விவரி.




அ. வரைபட உதவியுடன் முடுக்கி இயங்கும் விதம்:

SS என்பது சேமிப்பு கோடு, II முதலீட்டு கோடு $E_1$ புள்ளியில் பொருளாதாரம் $OY_1$ வருமானத்துடன் சமநிலையில் இருக்கிறது. சேமிப்பும் முதலீடும் $OI_2$ லிருந்து $OI_4$ ஆக அதிகரிக்கிறது. இது வருமானத்தை $OY_1$ லிருந்து $OY_3$ ஆக அதிகரிக்கிறது. $E_3$ சமநிலைப் புள்ளியில் முதலீடு $I_2I_4$ ஆக முழுவதுமாக வெளிப்புற காரணியில் அதிகரிக்கிறது என்றால் வருமானமும், $Y_1Y_3$ ஆக முடுக்கியின் விளைவாக அதிகரிக்கும். ஆனால் இவ்வரைபடத்தில் வெளிப்புற முதலீடு $I_2I_3$ ஆகவும், தூண்டப்பட்ட முதலீடு $I_3I_4$ ஆகவும் அதிகரிக்க வருமானம் $Y_1Y_2$ ஆனது பெருக்கின் விளைவாலும் மற்றும் அதிகரித்த வருமானம் $Y_2Y_3$ முடுக்கியின் விளைவாலும் ஏற்படுகின்றது.

(அல்லது)

ஆ) உற்பத்தியில் எடுத்துக்காட்டுடன் இயங்கும் விதம்:



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

1000 நுகர்வு பொருட்களை உற்பத்தி செய்வதற்கு 100 இயந்திரங்கள் தேவைப்படுகிறது. ஒவ்வொரு வருடமும் 10 இயந்திரங்கள் மாற்றியமைக்கப்படுகிறது.

10 சதவீதம் அளவிற்கு நுகர்வு பொருட்களின் தேவை அதிகரிக்கிறது. (1000 லிருந்து 1100 ஆக). இதன் விளைவாக மேலும் 10 இயந்திரங்களுக்கான தேவை அதிகரிக்கும். இயந்திரத்தின் மொத்த தேவை 20 ஆகும். நுகர்வு பொருட்களின் தேவை அதிகரிப்பானது முதலீட்டை அதிகரிக்கிறது. இதுவே முடுக்கியின் செயல்பாடு ஆகும்.

17. மூலதனத்தின் இறுதிநிலை உற்பத்தித் திறனுக்கும் (MEC) முதலீட்டின் இறுதிநிலை உற்பத்தித் திறனுக்கும் (MEI) உள்ள வேறுபாடுகள் யாவை?

| மூலதனத்தின் இறுதிநிலை உற்பத்தித் திறன் (MEC) | முதலீட்டின் இறுதிநிலை உற்பத்தித் திறனுக்கும் (MEI) |
|---|---|
| 1.மூலதனத்தின் அளிப்பு விலையை பொறுத்து அமைகிறது.<br>2.வரைபடத்தில் படுக்கை அச்சில் மூலதன இருப்பு அளக்கப்படுகிறது.<br>3.இது ஒரு இருப்பு கருத்து.<br>4.ஒவ்வொரு வட்டிவீத அளவிலும் உத்தம மூலதன இருப்பை நிர்ணயிக்கிறது. | 1.மூலதனத்தின் தேவை மற்றும் விலையை பொறுத்து அமைகிறது.<br>2.வரைபடத்தில் படுக்கை அச்சில் முதலீட்டு அளவு அளக்கப்படுகிறது.<br>3.இது ஒரு ஓட்ட கருத்து.<br>4.ஒவ்வொரு வட்டிவீத அளவிலும் நிகர முதலீடு எவ்வளவு என்பதை நிர்ணயிக்கிறது. |
| 5.ஆரம்ப மூலதனத்தை கணக்கில் கொள்ளாமல் மூலதனத்தின் ஒவ்வொரு அலகிலிருந்து கிடைக்கும் விளைவை குறிக்கிறது. | 5.ஆரம்ப மூலதனத்திற்கு பிறகு வந்த மூலதனத்துடன் விளைவை விகிதத்தை காட்டுகிறது. |

18. இர்விங் பிஷரின் பண அளவுக் கோட்பாட்டினை விளக்குக.

அ. விளக்கம் :

1. இக்கோட்பாட்டினை உருவாக்கிய பெருமை இர்விங் ஃபிசரைச் சாரும். பரிவர்த்தனை சமன்பாடு வாயிலாக விளக்கினார். பண அளிப்பின் அளவு மாற்றம் அடையும் போது விலையும் மாற்றம் அடையும்.

2. சமன்பாடு MV=PT

M=மொத்த பண அளவு

V=பணசுழற்சி வேகம்

P=பொது விலை மட்டம்

T=வாணிப அளவு

குறிப்பிட்ட கால மொத்த பண அளிப்பு (MV) மொத்த பண தேவை மதிப்பிற்கு சமம் (PT) MV=PT (பண அளிப்பு =பண தேவை)

நவீன வாணிப பொருளாதாரத்தில் காகித பணத்துடன் வங்கி கேட்பு வைப்புகள், கடன் பணம், அவைகளின் சுழற்சி வேகம் முக்கிய பங்கு வகிக்கிறது.

$PT=MV+M^{I}V^{I}$ — $M^{I}$ - வங்கி கடன் பண அளவு

(அல்லது)

$P=MV+M^{I}V^{I}/T$ — $V^{I}$ - வங்கி கடன் சுழற்சி வேகம்

ஆ.வரைபட உதவியுடன் விளக்கம்:

வரைபடம் (அ) ல் விலைமட்டச் சார்பு OP=f(M)
நேர்க்கோடு வரைபடத்தின் தோற்றுவாயிலிருந்து
$45^{0}$ அமையும் பொழுது பணத்தின் அளவிற்கும் விலை
மட்டத்திற்கும் உள்ள நேரடி சம விகித உறவு விளக்கும்.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

வரைபடம் (ஆ) ல் பணமதிப்பு சார்பு IP=f(M) வளைகோடு மேலிருந்து கீழ் நோக்கி சரிந்து பண அளவிலும் பண மதிப்பிற்கும் உள்ள எதிர்மறை தொடர்பு சுட்டிக் காட்டும்.

19. பணத்தின் பணிகளை விளக்குக.

அ) முதல்நிலைப் பணிகள்
1. பணம் ஓர் பரிவர்த்தனை கருவி
2. பணம் ஓர் மதிப்பின் அளவுகோல்

ஆ) இரண்டாம் நிலை பணிகள்
1. பணம் ஓர் மதிப்பு நிலை கலன்
2. பணம் வருங்கால செலுத்துகைக்கான ஓர் அடிப்படை
3. பணம் வாங்கும் திறனை மாற்றிக் கொள்ளும் கருவி

இ) துணைப் பணிகள்
1. கடனுக்கான அடிப்படை
2. பணம் தேசிய வருவாய் பங்கீட்டிற்கு உதவுகிறது.
3. இறுதிநிலைப் பயன்பாட்டை ஒப்பிடவும் இறுதி நிலை உற்பத்தி திறனை ஒப்பிடவும் பணம் பயன்படுகிறது.
4. பணம் மூலதனத்தின் உற்பத்தி திறனை உயர்த்துகிறது.

ஈ) இதரப் பணிகள்
1) திரும்ப செலுத்தும் திறனை தக்க வைக்க பணம் உதவுகிறது.
2) பணம் பொதுமைப்படுத்தப்பட்ட வாங்கும் திறனை குறிக்கிறது.
3) பணம் மூலதனத்திற்கு நீர்மைத் தன்மை தருகிறது.

20. ஒரு பொருளாதாரத்தில் பண வீக்கத்திற்கான காரணங்கள் மற்றும் விளைவுகள் யாவை?

அ. பண அளிப்பிற்கான காரணங்கள்
(1) பண அளிப்பு உயர்வு
(2) செலவிடத் தகுந்த வருமான உயர்வு
(3) உயர்ந்து வரும் செலவுகள்
(4) நுகர்வோர் செலவு அதிகரித்தல்
(5) மலிவுப் பணக்கொள்கை
(6) பற்றாக்குறை நிதியாக்கம்
(7) கணக்கில் காட்டப்படாத சொத்துக்கள் நடவடிக்கைகள் மற்றும் கறுப்புப்பணம்
(8) பொதுக் கடனை மீளச் செய்தல்
(9) ஏற்றுமதி உயர்வு

ஆ. பணவீக்கத்தின் விளைவுகள்:
(1) உற்பத்தியின் மீதான விளைவுகள்:
பணவீக்கம் உற்பத்தியாளர்கள் மற்றும் வணிகர்களுக்கு ஒரு ஊக்க காரணியாக செயல்படும்.
(2) பகிர்வின் மீதான விளைவுகள்:

- கடன் பெற்றோர் பண வீக்க காலத்தில் ஆதாயமும், கடன் வழங்கியோர் இழப்பையும் சந்திப்பர்.
- நிலையான வருவாய் பிரிவினர்: நிலையான வருவாய் உடையவர் பணவீக்கத்தினால் பெரிதும் பாதிக்கப்படுவார்கள்.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net

- தொழில் முனைவோர்: இவர்களுக்கு பணவீக்கம் ஒரு வரமாகும். பொருள் இருப்புகளின் விலையேற்றம் அவர்களுக்கு எதிர்பாரா லாபம் (Wind fall gain) கிடைக்கும்.
- முதலீட்டாளர்கள்: கடன் பத்திரம் வாங்கிய முதலீட்டாளர்களுக்கு நிலையான வட்டி கிடைக்கும். அவர்களுக்கு இழப்பு ஏற்படும். பங்கு முதலீட்டாளர்கள் ஆதாயம் பெறுவர்.


21. வணிக சுழற்சியின் பல்வேறு கட்டங்களை விவரிக்க.

I. பூரிப்பு கட்டம் (Boom)
வளர்ச்சி கட்டத்தின் உச்சத்தில் பூரிப்பு நிலை தோன்றும். இங்கு பொருளாதார நடவடிக்கைகள் உச்ச நிலையில் இருக்கும். உற்பத்தி, கூலி, லாபம் மற்றும் வட்டி வீதங்கள் உயரும்.

II. பின்னிறக்கம் (Recession)
பூரிப்பில் வெடிப்பு நிலை ஏற்பட்டு பொருளாதாரம் பின்நோக்கி திரும்புவதை பின்னிறக்கம் எனப்படும். இக்கட்டத்தில் உற்பத்தி, கூலி, லாபம், வட்டி ஆகியன குறையத் தொடங்கும். முதலீடு குறைந்து, உற்பத்தி வருமானம் குறையும்.

III. மந்தம் (Depression)
மூன்றாவது கட்டமான மந்த காலத்தில் நிறுவனம் நட்டமடையும். மூடப்படும். வட்டி, இலாபம், கூலி மிகக் குறைந்த அளவில் இருக்கும். வாணிப சுழற்சியின் மிக மோசமான கட்டம் மந்தமாகும்.
இங்கு வாங்கும் சக்தி இல்லாத காரணத்தால் பொருட்கள் கிடங்குகளில் தேக்கமடையும் நிலை "தொட்டி" (Trough) எனப்படும்.

IV. மீட்சி (Recovery or Revival)
மந்த நிலைக்குப்பின் மூலதன தேவை மீட்சி பெறும். ஆரசின் தன்னிச்சை முதலீடு (Autonomous Investments) பொருளாதார நடவடிக்கை மேல்நோக்கி திரும்ப பெறும் வேலைவாய்ப்பு, வருமானம் உயர்வு, தேவையை உயர்த்தும் கூலி, லாபம், உற்பத்தி, வேலைவாய்ப்பு உயரும்.




22. நாட்டின் பொருளாதார மேம்பாட்டில் வணிக வங்கிகளின் பங்கினை விளக்குக?
(மெல்ல கற்கும் மாணவர்களுக்கு ஏதேனும் 5 மட்டும்)

1. மூலதன திரட்சி: வணிக வங்கி மூலதன திரட்சியில் முக்கிய பங்கு வகிக்கிறது. பொதுமக்களின் பயன்படுத்தப்படாத சேமிப்புகளை திரட்டுவதில் கவர்ச்சிகரமான திட்டம் அறிமுகப்படுத்தி மூலதன ஆக்கம் செய்கிறது.
2. கடன் உருவாக்கம்: இதன் மூலம் உற்பத்தி, வேலைவாய்ப்பு, வருமானம், விற்பனை ஏற்றம் பெருகும்.
3. நிதியை முறைப்படுத்துதல்: உற்பத்தி திறன் குறைவாக உள்ள துறைக்கு முதலீடு குறைத்து, உற்பத்தி திறன் அதிகமுள்ள துறைக்கு முதலீட்டு கடன் திசை திருப்பப்படும்.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

4. சரியான வகை தொழிற்சாலைகளை ஊக்குவித்தல் : வங்கி சரியான தொழிலையும், நபர்களையும் தேர்ந்தெடுத்து கடன் வழங்குகிறது. எந்த பொருளுக்கு தேவை அதிகமோ அப்பொருளை உற்பத்தி செய்யும் உற்பத்தியாளர்களுக்கு கடன் வழங்குகிறது.

5. கடனை பணமாக்குகிறது : கடன் விற்பனையில் கடனுக்கான உத்திரவாத மாற்றுச்சீட்டுகளை வங்கிகள் கழிவு செய்தால் வர்த்தக நிறுவனம் இடையூறு இன்றி தொழில் தொடரலாம்.

6. அரசிற்கு நிதி வழங்குகிறது: குறைந்த வளர்ச்சி அடைந்த நாடுகளில் வளர்ச்சி மேம்படுத்த, வணிக வங்கி அரசிற்கு நீண்ட கால, குறுகிய கால கடன் வழங்குகிறது.

7. வேலைவாய்ப்பினை உருவாக்குதல்: நிறைய கிளைகள் திறக்கப்பட்டு கடன் உருவாக்கம் செய்வதால் வேலைவாய்ப்பு பெருகுகிறது.

8. வங்கிகள் தொழில. முனைவினை ஊக்கப்படுத்துகிறது: இந்தியா போன்ற வளரும் நாடுகளில் அண்மைக் காலத்தில் வணிக வங்கிகள் தொழில் முனைவினை ஊக்கப்படுத்தி வருகிறது.

23. வணிக வங்கிகளின் பணிகளை விளக்குக.

1.முதன்மைப் பணிகள்

அ) வைப்புகளை ஏற்றுக்கொள்ளுதல்

(1)கேட்பு வைப்புகள்: எப்பொழுது வேண்டுமானாலும் பணத்தை பெறலாம்
- சேமிப்பு கணக்கு
- நடப்பு கணக்கு

(2)கால வைப்புகள்: குறிப்பிட்ட காலம் பெற முடியாது. கூடுதல் வட்டி வழங்கப்படும்.
- நிலை வைப்பு
- தொடர் வைப்பு

2.இரண்டாம் நிலை பணிகள்

அ) முகமைப்பணிகள்

(1)காசோலைகளை பணமாக்குதல்
(2)வருமானத்தை பெறுதல்
(3)செலவுகளை செலுத்துகிறது.

ஆ) பொதுப் பயன்பாட்டுப் பணிகள்:

(1)பாதுகாப்புப் பெட்டக வசதி
(2)பயணக் காசோலை வழங்குதல்
(3)அந்நிய செலாவணியை கையாளுதல்
(4)கடன் உறுதியளிப்புக் கடிதம்
(5)பத்திரங்களுக்கு எழுத்துறுதி வழங்குதல்
(6)மின்னணு வங்கி

இ) இதரப் பணிகள்

(1) பண அளிப்பு
(2) கடன் உருவாக்கம்
(3) புள்ளி விவரங்களை திரட்டுதல்

24. இந்திய ரிசர்வ் வங்கி பணிகளை விவரி?

1. பண அதிகார அமைப்பு
2. காகிதப் பண வெளியீடு
3. வங்கி உரிமங்கள் வழங்குபவர்
4. அரசுக்கான வங்கி
5. வங்கிகளின் வங்கி
6. கடைசி நிலைக்கடன் ஈவோன்
7. தீர்வாக செயல்படுகிறது.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

8. அந்நிய செலாவணி பாதுகாவலர்
9. பொருளாதாரத்தை நெறிப்படுத்துகிறது
10. அரசு கடன் பத்திரங்களை நிர்வகிக்கிறது
11. செலுத்துதல் மற்றும் தீர்வு செய்வதில் நெறியாளராகவும், மேலாளராகவும் செயல்படுகிறது.
12. மேம்பாட்டுப் பணி
13. பணவியல் மற்றும் இதர தகவல்களை வெளியிடுகிறது.
14. பரிவர்த்தனை மேலாளர் மற்றும் நெறியாளர்
15. வங்கி குறை தீர்ப்பாய திட்டம்
16. இந்திய வங்கி நெறிமுறை மற்றும் மதிப்பீடுகள் வாரியம்

25. பணக் கொள்கையின் நோக்கங்கள் யாவை? (மெல்ல கற்கும் மாணவர்களுக்கு அனைத்து தலைப்பு மூன்று விளக்கம் மட்டும்)

1. பணத்தின் நடுநிலைத்தன்மை: பண நடுநிலையாளர் பண அமைப்பு பொருளாதாரத்தில் பணம் நடுநிலை தன்மை கொண்டதாக இருக்க வேண்டும் என்றனர். பணத்தில் ஏற்படும் மாற்றம் அனைத்து பொருளாதார ஏற்றத் தாழ்வுக்கு காரணம் ஆகும்.

2. விகித நிலைத்தன்மை: பணவியல் கொள்கையின் பாரம்பரிய நோக்கமாகும். பொன் திட்டம் அமலில் இருந்த காலத்தில் முக்கிய நோக்கம் நாட்டின் செலுத்து சமநிலையில் சமனற்ற நிலை தோன்றினால் அப்பொழுது தங்க நுகர்வின் காரணமாக அது தானாகவே சரிசெய்து கொள்ளும்.

3. விலை நிலைத் தன்மை: பணவியல் கொள்கையின் முக்கிய நோக்கம். விலை நிலைத் தன்மை மக்களிடையே பொதுவான நம்பிக்கை ஏற்படுத்தும் விலை நிலைத் தன்மை என்பது விலை தேக்கமடைந்து இருக்காது. மிதமான விலையேற்றம், பொருளாதார வளர்ச்சியின் ஊக்க சக்தி ஆகும். மிதமான விலை ஏற்றம், நிலையான விலையின் பண்புகளை கொண்டது.

4. முழு வேலைவாய்ப்பு: உலக பெருமந்தத்தின் பொழுது வேலை வாய்ப்பின்மை மிக வேகமாக அதிகரித்து, இதனால் சமூக பொருளாதார அளவில் பாதிப்பை ஏற்படுத்தியது. 1936 கீன்சின் வேலைவாய்ப்பு, வட்டி மற்றும் பணத்திற்கான பொது கோட்பாடு என்ற நூல் முழு வேலைவாய்ப்பு என்ற பணவியல் கோட்பாட்டின் குறிக்கோளை முன்னிலைப்படுத்தியது.

5. பொருளாதார வளர்ச்சி: பொருளாதார வளர்ச்சி என்பது உண்மை தலா வருமானம் அதிகரிப்பது, மனித விருப்ப பண்ட உற்பத்தி அதிகரிப்பதை உணர்த்துவது. தேவை, அளிப்பு, சமநிலை, சாதகமான சேமிப்பு-முதலீடு, சமநிலை பணஅளவு, உற்பத்தி அளவு பராமரித்து நீடித்த பொருளாதார வளர்ச்சி ஏற்படுத்த பணக்கொள்கை சிறந்தது.

6. செலுத்துச் சமநிலையில் சமநிலையை பேணுதல்: உலகப் போருக்கு பின்னர் வாணிப சமனற்ற நிலை தோன்றின. இது பொருளாதாரத்தின் மற்ற குறிக்கோளை அடையும் திறனை குறைக்கும். எனவே பணவியல் கொள்கையின் முக்கிய நோக்கமாக சமநிலைப் பேணுதல் இருக்கும்.

.

26. மொத்த தேசிய உற்பத்திக்கும் சுற்றுச்சூழல் தரத்துக்கும் இடையேயான தொடர்பினை விளக்குக. (மெல்ல கற்கும் மாணவர்கள் வரைபடம் 3 Point மட்டும்)


1. பொருளாதார உற்பத்திக்கும், சுற்றுச்சூழலுக்கும் இடையேயான தொடர்பினை விளக்க ஆலன் நீஸ் மற்றும் R.V.அய்யர்ஸ் பொருள்சார் சமநிலை அணுகுமுறை வகுத்தளித்துள்ளனர்.
2. மொத்த உற்பத்தி செயல்பாடுகள் உள்ளீடு, வெளியீடு ஆகியவற்றிற்கிடையே சமமான ஓட்டமாக உள்ளது.
3. இயற்கை உலகிலிருந்து பெறப்படும் மூலப்பொருட்களும் சக்தியும் = மொத்த தேசிய உற்பத்தி பணிகள் நுகர்வு மற்றும் உற்பத்தியில் ஏற்படும் கழிவுகள் + மறுசுழற்சி = இயற்கை உலகில் இறுதியாக விடப்படும் உற்பத்தி மற்றும் நுகர்ச்சி கழிவு




Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

(அல்லது)

**வரைபட உதவியுடன் விளக்கம்:**




மொத்த தேசிய உற்பத்திக்கும் சுற்றுச் சூழலுக்கும் உள்ள தொடர்பு




www.Padasalai.Net

27. புறவிளைவுகள் என்ற கருத்தினையும் அதன் வகைபாடுகளையும் விளக்குக.

புற விளைவுகள் விளக்கம் :

தனி நபர்களின் நுகர்ச்சி அல்லது உற்பத்தி ஆகிய பொருளாதார நடவடிக்கைகள் காரணமாக நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பங்குபெறாத சமுதாயத்திலுள்ள மற்றவர்களுக்கு ஏற்படும் செலவு.

வகைப்பாடுகள்:

1.நேர்மறை நுகர்ச்சி புறவிளைவு - அனைவருக்கும் பாதுகாப்பு
2.எதிர்மறை நுகர்ச்சி புறவிளைவு - ஒலி பெருக்கி ஒலி மாசு
3.நேர்மறை உற்பத்தி புறவிளைவு - தேனி வளர்ப்பு மகரந்தச் சேர்க்கை
4.எதிர்மறை உற்பத்தி புறவிளைவு - ஆலைக் கழிவு காற்று மாசு



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

28. நீடித்த அல்லது வளம் குன்றா வளர்ச்சி முக்கியத்துவம் மற்றும் அதன் நோக்கங்களை விளக்குக. (மெல்ல கற்கும் மாணவர்கள் ஏதேனும் 10 Point மட்டும்)

நீடித்த வளர்ச்சியின் முக்கியத்துவம்:

இப்போதுள்ள தலைமுறையினர் மட்டுமன்றி எதிர்காலத் தலைமுறையினரும் வாழ்வதற்குத் தேவையான வளத்தை வைத்துவிட்டு அடைகின்ற மேம்பாடு நீடித்த நிலையான மேம்பாடு. இது தலைமுறைகளுக்கு இடையேயான சமத்துவம்.

நோக்கங்கள்:

1. வறுமையற்ற நிலை
2. பட்டினியில்லா நிலை
3. சிறந்த உடல்நலம்
4. தரமான கல்வி
5. பாலின சமத்துவம்
6. தூய்மையான குடிநீர் மற்றும் சுகாதாரம்
7. தூய்மையான மற்றும் மலிவான ஆற்றல்
8. தரமான வேலை மற்றும் பொருளாதார வளர்ச்சி
9. தொழில், புத்தாக்கம், உள்கட்டமைப்பு
10. ஏற்றத்தாழ்வு குறைப்பு
11. நிலைத்த நகரங்கள் மற்றும் சமுதாயங்கள்
12. பொறுப்பான நுகர்வு மற்றும் நிலையான உற்பத்தி
13. தட்பவெப்ப நிலை மாற்றங்களின் தாக்கங்களை குறைத்தல்
14. கடல் வளங்களை பாதுகாத்தல்
15. காடுகள், நிலம் அழிவை தடுத்தல்
16. அமைதி மற்றும் நீதிக்கான வலிமையான நிறுவனங்கள்
17. உலக ஒத்துழைப்பு

www.Padasalai.Net



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com